JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா

"...,வாதை உன் கூடாரத்தை அணுகாது."


சங்கீதம் 91:10

அனுதினமும்

2015 மார்ச்

42 வது வெளியீடு






# அட்டைப்பட விளக்கம்

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! 42வது வெளியீடான இந்த ஜீவ மன்னா தினமஞ்சரியில் அட்டைப்படத்தில் காணப்படுவது நவீன முறையில் அமைக்கப்பட்ட சுகபோகம் நிறைந்த இல்லமாகும். அதைக் காண்கின்ற போது எனக்கும் இப்படியான வீடு ஒன்று இருக்குமானால் என்று நீங்கள் எண்ணக் கூடும். உங்களுக்கும் இவ்வண்ணமாக ஒரு அழகான வீட்டை அமைத்துக் கொள்ள முடியும்.



இன்னுமாக உலக மனிதர்கள் செலவு செய்து இவ்வண்ணமாக அல்லது இதை விட மனங்கவரும்படி அலங்காரமாக அவர்களது வீட்டை நிர்மாணித்துக் கொள்வார்கள். இவ் வீட்டைக் குறித்து என்னுடைய உள்ளத்தில் ஒரு கேள்வி எழுந்தது. ஆனாலும் நீங்கள் எவ்வளவு தூரத்திற்கு என்னோடு உடன்படுகிறீர்கள் என்பதை நானறியேன்? நான் உங்களுக்கு கூறுவதென்னவென்றால் மிகவும் அலங்கார வசதிகளுடன் அமைக்கப்பட்ட இல்லங்களின் வெளித்தோற்றத்தில் நாம் காண்கின்ற அழகைப் போன்று அந்த இல்லத்தவரது வாழ்க்கை அலங்காரமானதாக இருக்குமா? ஏனென்றால் அந்த இல்லத்திலுள்ளவர்கள் சுகத்துடனும், சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் ஜீவிக்கின்றார்களா என்று நாம் அறிய முடியாது.என்பதையே ஆகும்.



தேவ பிள்ளகைளே! ஆத்மீக பிள்ளைகளான நீங்கள் புதிதாக வீடு வாங்குகையில், அல்லது வீடு கட்டும் பொழுதும் உங்களுக்குச் சரியானது என்னவென்று வெளிப்படுத்தலை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, நீங்கள் தேவன் பாதத்தில் ஜெபம் பண்ணுங்கள். தேவ வசனம் கூறுகிறது சங்கீதம் 127:1இல் "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" என்றாகும். ஆகையால் தேவன் பேரில் அசையாத உறுதியான விசுவாசத்தோடு தேவன் உங்களுக்கு வழிகாட்டுவதையும் தேவனுடைய சித்தத்தினையும் அறிந்து நீங்கள் அனைத்து காரியங்களையும் ஆரம்பியுங்கள்.



தேவன் உங்களுக்கு அனைத்தையும் கொடுத்து உங்கள் வீட்டைக் கட்டி முடிக்க ஆசீர்வதிப்பாராக! அப்படியில்லாவிடின் உங்களுக்குத் தகுதியான ஒரு வீட்டை விலை கொடுத்து வாங்க ஆசீர்வதிப்பார். அது மாத்திரமின்றி உங்கள் வீடு வெளித்தோற்றத்தில் அழகாக காணப்படுவதைப் போன்று உங்கள் வீட்டினுள்ளும் தேவன் உங்களுக்குக் கொடுக்கின்ற சந்தோஷம், சமாதானம், சுகம் நிரம்பி வழியும் ஏனென்றால் அட்டைப்படத்தில் சங்கீதம் 91:10இல் தேவ வசனத்தைப் போன்று தேவனை விசுவாசிக்கும் உங்களுக்கு எவ்வித தீமையும் நிகழாததோடு வாதையும் ஒரு போதும் அணுகாது.

# மகிமை பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

**உங்கள் வாழ்வில் ஆத்மீக எழுப்புதலை உருவாக்கும் ஜீவ மன்னா!**

42வது ஜீவ மன்னா தின மஞ்சரி வெளியீட்டின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். முதற்கண் தேவனுக்கே சகல கௌரவமும், துதியும், மகிமையும் செலுத்துகின்றேன். அப்படியே வாசகக் கட்டணங்களினாலும், சந்தோஷக்காணிக்கைள் எமக்குக் கொடுத்த இந்த ஜீவ மன்னா தினமஞ்சரி வெளியீட்டுக் காரியங்களில் பங்கெடுக்கும் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

புதிய ஏற்பாட்டில் பவுலடியார், யோவான், யாக்கோபு ஆகிய இயேசுவின் பிரதான சீஷர்கள் தேவ இராஜ்யத்தைக் கட்டியெழுப்பும்படியாகவும், அதன் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுகள்பட்டு, தம்மையே அர்ப்பணித்து, மிக தீவிரமாக செயல்பட்டார்கள் என்பதை நாமறிவோம். அவ்வண்ணமாக நிகழ்காலத்தில் தேவ இராஜயத்தைக் கட்டியெழுப்பும்படியாகவும் அதன் வளர்ச்சிக்காக தேவதாசர்கள் (ஆண், பெண் இருபாலரும்) அதி தீவிரமாக செயல்பட வேண்டுமென்றும் அதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கவும் வேண்டுமென்பதே எனது ஆவலாகும். ஆத்மீக எழுப்புதல் உருவாகிய நாடுகளை நோக்குவோமானால் அந்த நாடுகளில் மனிதர்கள் கடின உள்ளங்களோடும், அநீதியாகவும், சரீர சம்பந்தமான பாவங்களோடும், பாவ வழிகள் எத்தனையோ அத்தனை வழிகளிலும் சென்றும் தங்கள் வாழ்க்கையை அழித்தும் வாழ்ந்த ஜனங்களிடையே தேவதாசர்கள் முன் வந்து இயேசுவின் அன்பை வெளிப்படுத்தி பாவ வழிகளை விட்டு மனந்திரும்புமாறு போதித்தார்கள் அவர்களது ஜெபத்திலும் உபவாசத்திலும் தேவ அக்கினி ஊற்றப்பட்டது. தேசம் இரட்சிக்கப்பட்டது என்பதைக் காண்கிறோம்.

பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் அல்ல ஆவியினால் சகலமும் ஆகுமென எழுதியுள்ளதின்படி விசுவாசத்தோடு ஜெபிப்பீர்களாயின் எங்கள் தேசத்தில் மாபெரும் எழுப்புதல் உருவாகும். எங்கள் ஜீவ மன்னாவை வாசித்து மனந்திரும்பி இயேசுவுக்குள் வந்தவர்களது சாட்சிகள அநேகமுண்டு. நீங்கள் இந்த ஜீவ மன்னா தினமஞ்சரியை வாசித்து இன்னும் அநேகருக்கு கிடைக்கும்படியாகச் செய்து ஆத்மீக வளர்ச்சிக்கு பங்காளராகுங்கள். இயேசுவின் நாமத்தில் உங்கள் வாழ்க்கையில் வெற்றிப் பெறுங்கள் என்று பிரர்த்திக்கின்றேன்.

பல நூல்கள் உலகில் வெளிவந்தாலும்
பரிசுத்த வேதாகமமே விருந்து ஆகும்
பரிசுத்த வாழ்வுக்கு போசனை ஆகும்
பரிசுத்த பாதைக்கு விளக்கு ஆகும்!

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

ஜீவ மன்னா
மார்ச் 01
ஞாயிறு

# சிதைந்த வாழ்வினை மறுபடியும் கட்டியெழுப்பும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம் அதி: 18 – 19

**"நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்ததுபோல அவர்களைக் கட்டுவித்து,"** (எரேமியா 33:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற மகிமையின் தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மாதத்தின் முதல் தினமாகிய இன்று இவ் இதமான காலைப் பொழுதினிலே இம்மாதம் முழுவதுமாக நன்மையான ஈவுகளைப் பெற்று மகிழ்ச்சியுடன்** வாழுமாறு வாழ்த்துகின்றேன். அவர் காலங்களையும், சமயங்களையும் மாற்றுகிறவர் ராஜாக்களை தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவன் **ஞானிகளுக்கு ஞானத்தையும் அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.** ஏற்ற காலத்தில் பூமியின் மீது மழையைப் பெய்யப் பண்ணுகிறவரும் சமுத்திரத்தில் சஞ்சரிக்கும் எண்ணிறைந்த ஜீவன்களும், சிறிவைகளும், பெரியவைகளுமான மச்சங்களுக்கும் ஏற்ற வேளையில் ஆகாரத்தை தருபவருமான ஜீவனுள்ள **மகத்துவம் மிக்க சர்வ வல்லமையுள்ள தேவாதி தேவன் இன்றும் உங்களோடிருந்து ஜெயம் பெறச் செய்வார்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய எமது பிரதான தேவ வாக்கியம் உரைக்கிறது. **எரேமியா 33:7இல் 'யூதாவின் சிறையிருப்பையும் இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி முன்னிருந்தது போல அவர்களை கட்டுவித்து'** என்று இதன் விளக்கத்தை தியானிப்போமாகில் உங்கள் வாழ்க்கை இடிந்து விழுந்து இருக்குமானால் தேவனாகிய ஆண்டவர் உங்கள் வாழ்வின் உபத்திரவங்களை நீக்கி, எல்லாத் தடைகளையும் இல்லாமலாக்கி எல்லாவற்றிலுமிருந்து உங்களை விடுவித்து உங்கள் வாழ்வினை உயர்த்துவார் என்பதாக. ஆத்மீகப்பிள்ளைகளாகிய நீங்கள் யாவரும் தேவனைக் குறித்து நல்லவைகளாக சிந்திக்க பழகிக் கொள்ளுங்கள். **உங்கள் எதிராளியாகிய சாத்தான் தேவனைக் குறித்தும் உங்கள் வாழ்வினைக் குறித்தும் உங்கள் உள்ளத்தில் விசுவாசமற்ற தோல்வியான நினைவுகளையே உண்டு பண்ணுவான்.** எனவே அவன் உங்களில் செயல்பட இடமளிக்காதீர்கள் என் தேவன் என்னோடிருக்கிறவராய் இருப்பதால் **என் பிரச்சினைகள் யாவும் அவரால் விடுவிக்கப்படும் என விசுவாசித்து நிலைத்திருங்கள்.** ஏதோ காரணத்தால் இன்று பிரச்சினைகள் முடிவடையாது போனால் **உள்ளம் கலங்கி அதைரியப்படாது நாளைய நாளில் தேவன் என்னை விடுதலையளிப்பார் என்று எண்ணி விசுவாசத்துடன் இடைவிடாது ஜெபியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயத்தில் விசுவாசத்துடன் ஜெப விண்ணப்பத்தை ஏறெடுப்பீர்களாகில் பதில் கிடைப்பது நிச்சயம். **'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்' என்று யோவான் 11:40இல்** ஒரு வேதவாக்கியமுண்டு. ஆகையால் ஆண்டவரிடம் விசுவாசம் கொண்டு அவரையே நோக்கி ஜெபியுங்கள். இப்படி ஜீவிக்கும் **உங்களை ஆண்டவர் ஒரு போதும் கைவிடமாட்டார்.** உங்களுக்கு ஒத்தாசைகள் பல செய்வார். உங்கள் வாழ்விலே இருக்கும் சாத்தானின் அடிமைத்தனங்களை நீக்கி தடைகளை இல்லாமலாக்கி ஆரம்ப நாட்களைப் போல் ஆத்துமாவிற்கு சக்தியளித்து, பெலத்தை கொடுத்து உங்களை ஆத்மீகத்தில் உயர்த்துவார். ஆகையால் ஆத்மீகத்தில் நிலைக்குலைந்து விழுந்து போய் இருக்கிறீர்களா? மறுபடியும் **தேவனுடைய திருப்பாதத்தில் ஜெபித்து உங்கள் ஆத்மீக வாழ்வின் ஆரம்ப நாட்களை பெற்றுக் களிகூறுங்கள். இன்று மகிழ்ச்சிகரமான நாள்!**

ஜெபம்

என் அன்புள்ள ஆண்டவரே! இடிந்து விழுந்த என் வாழ்விலே ஆரம்ப நாட்களை மறுபடியும் காணச் செய்யும்படி தயை கூர்ந்தவரே அப்பா பிதாவே! இன்று தொடக்கம் மறுபடியும் உம்மிலே வளரத்தக்கதாக அருள் புரியுமாறு இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்." (நீதிமொழிகள் 24:16)

ஜீவ மன்னா

மார்ச் **02** திங்கள்

## தேசத்தைக் குறித்து எம் கடமையை நிறைவேற்றுவோம் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் அதி: 20 – 21

**"நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம்; இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது; இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள்."** (ஆதியாகமம் 19:13)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு ***இன்று இரட்சிப்பின் நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.*** படைப்பின் தேவனுடைய சொந்த புத்திரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த பூமியிலே உண்டான ***சகல மனிதர்களினதும் பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்கப்படும்படியாக பலியாக இவ்வுலகிற்கு கொடுக்கப்பட்டார்.*** ஆகையால் தேவ பிள்ளைகளாக விளங்கும் நாமனைவரும் பேறு பெற்றவர்களாவோம்.

அருமையானவர்களே! ஆண்டவர் இயேசுகிறிஸ்து தமத சீஷர்களை தமது சாட்சிக்காரர்கள் என்றுரைத்தார். ஆகையால் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் யாவரும் அவருடைய சீஷர்கள் ஆவாம். அவருடைய சிலுவை மரணத்தின் மூலம் ***'பாவத்தின் சம்பளம் மரணம்'*** என்ற தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாங்கள் ***இந்த மீட்பை சகல மனிதர்களுக்கும் கிடைக்கும்படியாக ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.*** மேலே தரப்பட்ட எமது முதல் வசனம் ***ஆதியாகமம் 19:13இல் சோதோம் கொமோரா என்று இரு பட்டணங்களை அழிக்கும்படியாக தேவனால் அனுப்பப்பட்ட இரண்டு தேவ தூதர்கள் கூறிய வார்த்தைகளாகும்.*** ஏனெனில் சோதோம் கொமேரா பட்டணங்களில் துஷ்ட மனிதர்களின் கிரியைகள் பெருகியபடியால் மனிதர்கள் தேவனை நோக்கி கூக்கிரலிட்டார்கள். இக் கூக்குரல் தேவ சமுகத்திற்கு கேட்கப்பட்டது.

தேவ பிள்ளைகளே! இன்றும் இது நிகழுமல்லவா? ஏனெனில் தேசக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது அதேன்றால் ***தேசத்திலே உண்மையும் இல்லை இரக்கமும் இல்லை தேவனைப்பற்றிய அறிவும் இல்லை என ஓசியா 4:1இல்__எழுதப்பட்டிருக்கிறது.*** நானும் நீங்களும் ஜீவனுள்ள தேவனைக் குறித்து அறிந்திருக்கிறோம். ஆனால் அவரைக் குறித்து அறியாதவர்களாய் அதர்மமான வழிகளில் ஜீவித்து துஷ்ட கிரியைகள் செய்து பாவிகளாய் ஜீவிக்கும் குறித்து மனிதர்களுடைய கூக்குரல் படைப்பின் தேவனுக்கு கேட்கும் முன்பாக எம்மால் என்ன செய்ய முடியும்? என்பதை சிந்திப்போம் ஏனெனில் அன்று ***சோதோம், கொமோராவில் வாழ்ந்த மனிதர்களின் கூக்குரலை கேட்டு துஷ்டர்களை அழித்த தேவன் சோதோம் கொமோராவை அழித்த தேவனானவர் இன்றும் உயிரோடிருக்கிறார்.*** ஆகையால் நீங்கள் நாள்தோறும் தேசத்தைக் குறித்து ஜெபியுங்கள் தேசத்திற்காக ஜெபிக்க வேண்டிய உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள். அது ***உங்களுக்கு ஆசீர்வாதத்தை தரும். இன்றைய நாள் ஆசீர்வாதமான நாள்!***

**ஜெபம்**

பரலோக பிதாவே! பிள்ளைகள் யாவருக்கும் அழியும் தேசத்து ஜனங்களுக்காக ஜெபிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதை அறியத் தந்தபடியால் நன்றி! இன்று முதல் என் தேசத்தைக் குறித்து ஜெபிக்க என் கடமையை நிறைவேற்ற கிருபைத் தாருங்கள்! என்னை ஆசீர்வதிக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்." (எசேக்கியேல் 22:30)

| ஜீவ மன்னா | | |
|---|---|---|
| மார்ச் செவ்வாய் 03 | **கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் !** | இன்றைய வேதவாசிப்பு: லேவியராகமம் அதி: 22 - 23 |

**"கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்."** (யாத்திராகமம் 14:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! உயிரோடிருக்கிறவரும், உன்னதங்களிலே வாசம் பண்ணும் ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினால் ஜெயம் தரும் நாளாக இன்றைய தினம் விளங்கட்டும் என வாழ்த்துகின்றேன்.** அனேகவிதமான போராட்டங்களுடனும், சவால்களுக்கு மத்தியில் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் முன்னோக்கி சென்றுக் கொண்டிருக்கும் உங்கள் வாழ்வினிலே வெற்றியடையும்படி உபகாரம் செய்யும் மகோத்துவமுள்ள தேவனைக் குறித்து அறிந்துக் கொள்ளக் கூடுமானால் **உங்கள் வாழ்வினிலே நீங்கள் பெற்றுக் கொள்ளும் மகாபெரிய வரப்பிரசாதமாகும்.** ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் விரோதமாக அந்தகார வல்லமைகளும் அதே போல் **பொல்லாத ஆவிகளின் கூட்டமும் இப் புவிதனில் அலைந்து கொண்டிருப்பதை அறிகிறோம். அவைகளிடமிருந்து வெற்றி பெற வேண்டுமெனில் மனிதனுக்கும் விரோதமாக மனிதனுக்கு அதிக வல்லமை அவசியமாகிறது.**

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட வேத வாக்கியமானது இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர்களுடைய தலைவனான மோசே கூறிய வார்த்தையாகும். எகிப்தியருக்கு அடிமைப்பட்டிருந்த **இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்று கானான் தேசத்தை நோக்கி பிரயாணப்பட்டு போய்க் கொண்டிருக்கும் போது பார்வோனும் அவனுடைய யுத்த சேனைகளும் இஸ்ரவேலரை பின் தொடர்ந்து வந்தார்கள்.** இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் அருகினில் நின்றார்கள். தங்கள் முன்பாக செங்கடலும், தங்களை தொடர்ந்து பார்வோன் ராஜாவும் சேனைகளும் பின் தொடர்வதையும் கண்ட ஜனங்கள் மோசேயை நோக்கி வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர் என்று குறை கூற ஆரம்பித்தார்கள். அப்பொழுது **மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள்.** நீங்கள் நின்றுக் கொண்டு இன்றைக்கும் கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். இன்றைக்கு நீங்கள் காண்கின்ற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். **கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.**

அருமையானவர்களே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! **உங்களுக்கு விரோதமாக எவ்வளவு கெட்ட துஷ்டதனத்தின் ஆவிகளின் சேனைகள் செயல்பட்ட போதிலும் பயப்படாதீர்கள்!** மனிதர்களை உங்களுக்கு விரோதமாக தூண்டிவிட்டு அவர்கள் மூலமாய் பிரச்சினைகளை உருவாக்கக் கூடும். அப்படியாயினும் அஞ்சாதிருங்கள் **மனிதர்களுக்கு விரோதமாக செயல்படாதிருங்கள்.** நீங்கள் மௌனமாகவும், சாந்தமாகவும் இருங்கள், தேவனை நோக்கி ஜெபங்களை ஏறெடுங்கள். செங்கடலை பிளந்து இஸ்ரவேல் ஜனங்கள் நடந்து போக பாதையை அமைத்துக் கொடுத்த தேவன் தாமே **இன்றும் உங்களோடிருந்து பாடுகள், உபத்திரவங்கள், பிரச்சினைகளை நீக்கி, விடுவித்து ஜெயம் பெற்றவர்களாய் முன்னோக்கிச் நடத்திச் செல்வார். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் அன்பு தேவனே! இஸ்ரவேலரின் தேவனானவரே! இன்றும்
ஜீவனுள்ளவரே! என் துன்ப நேரத்தில் அமைதியாகவும், பொறுமையாகவும்
இருந்து ஜெயம் பெற கிருபை தருமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்." (சங்கீதம் 46:10)

## சத்துருவானவனின் உக்கிரமான கோபத்திற்கு அஞ்சாதீர்கள் !



**"நீ அவனை நோக்கி: சீரியர் எப்பிராயீமோடும், ரெமலியாவின் மகனோடும் உனக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணி,"** (ஏசாயா 4:6)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனாகிய நம் ஆண்டவர் **இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தினாலே இந்த இளங்காலை வேளையிலே தேவ பிரசன்னத்தில் நிரம்பி ஆசீர்வாதங்களை பெற்று மகிழ்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன்.** மானிடராகிய நாம் பெலவீனமடையும் போது நாம் மீளச் சக்தியை பெற்றுக் கொள்ளுமாறு எம் பரலோகத் தகப்பன் **அவரின் தேவ ஆவியானவர்களுக்கூடாக எமக்கு ஒத்தாசை புரிகிறார்.** ஆயினும் இந்த உபகாரம் தங்களது படைப்பின் தேவனைக் குறித்து அறிந்து அவரை ஏற்று வழி நடப்பவர்களுக்கு மாத்திரமே கிடைக்கும் வரப்பிரசாதமாகும். ஆகையால் **கவலைப்படாதிருங்கள்!**

அருமையானவர்களே! நாம் அவருடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தை பெற்று அதிர்ஷ்டக்காரராக மாறினோம். ஆயினும் எம் பரிசுத்த வாழ்வுக்கு விரோதமாகவும், உத்தமத்திற்கு விரோதமாகவும் **எம் எதிரியாகிய சத்துருவானவன் மிகவும் உக்கிரகத்தோடு எதிர் கிரியைகளை நடத்துவதை நாம் அறிவோம். வெளிப்படுத்தல் 12:12 இன்படி கூறுகிறது........** பிசாசனவன் தனக்குக் கொஞ்சக்கால மாத்திரம் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங் கொண்டு உங்களிடத்தில் இறங்கினபடியால் உங்களுக்கு ஆபத்து வரும் என்று சொல்லக் கேட்டேன் என்று. ஆகையால் எங்கள் ஆத்மீக வாழ்க்கையின் **எதிரிகளுடன் போரிட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இது மனிதர்களுடன் அல்ல அந்தகார சேனைகளுடன் என்பதை நாம் அறிவோம்.**

தேவ பிள்ளைகளே! சத்துருவானாகிய சாத்தான் உக்கிரக் கோபத்தோடு உங்களுக்கு விரோதமாக செயல் நடத்த போகிறான் என **நீங்கள் பயப்படாதிருங்கள்!** உங்கள் உள்ளம் பலவீனமடைய இடங் கொடாதீர்கள். நீங்கள் ஆண்டவருடைய திருப்பாதத்தில் ஜெபித்து ஆவியானவருடைய அபிஷேகத்தால் நிரம்பி உங்கள் உள்ளத்தை பெலப்படுத்துங்கள். பயம் உங்களை விட்டு வல்லமை பெறுகும்படியாகக் ஜெபித்துக் கொள்ளுங்கள். இன்றைய தினம் **ஏசாயா 7:6**இல் கர்த்தர் கூறுகிறார் **'நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப்பார். இந்த இரண்டு புகைகிற கொள்ளிக் கட்டைகளாகிய சீரியரோடே வந்த ரேத்சீனும் ரெமலியாவின் மகனும் கொண்ட உக்கிரக் கோபத்தினிமித்தம் உன் இருதயம் துவள வேண்டாம்.'** என்பதாக ஆகையால் மனிதர்களுக்கூடாக உங்களுக்கு விரோதமாக சாத்தான் கொண்டு வரும், செயல் நடத்தும் எதிர்க் கிரியைகளை குறித்து பயப்படாமலும் இருதயம் துவளாமலும் இருங்கள். **தேவன் உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வார். ஜெயத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

ஜீவனுள்ள பிதாவே! என் எதிராளியாகிய பிசாசின் கிரியைகளை அறிந்துக் கொள்ள தேவரீர் எமக்களித்த வார்த்தைகளுக்காய் நன்றி! அவனுடைய மிகுந்த கோபத்திற்கு பயப்படாதபடி என் இருதயம் துவளாதபடி பெலன் தந்து காத்தருளும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும்நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 4:3)

ஜீவ மன்னா

மார்ச் 05

வியாழன்

# உங்கள் கரங்கள் தூய்மையாய் இருக்கட்டும் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் அதி: 26 - 27

**"நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன்."** (சங்கீதம் 26:7)

அன்பான தேவ பிள்ளைகளே! மனப்பூர்வமாய் தம்மை நேசித்து அன்பு செலுத்தும் ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தால் உங்களுக்கு இன்று நல்ல நாளாக ஆசீர்வதிக்கும் பரிசுத்தமுள்ள தேவனாவார்.** எம்மை தனது சுவிகாரத்துக்குரிய தேவ பிள்ளைகளாய் மாற்றும் பொருட்டு, எம் பாவங்களை போக்கி சாபங்களை நீக்கும்படியாக, அவருடைய சரீரத்திலிருந்து மாசற்ற பரிசுத்த இரத்தம் சிந்தி **எம்மை பரிசுத்தப்படுத்தி உத்தமமான பிள்ளைகளாய் எம்மை மாற்றினார்.** இப்படியாக ஆண்டவருடைய பிள்ளைகளாய் பரிசுத்தமாய் வாழும் **பாக்கியம் பெற்ற நாங்கள் மிக அதிரஷ்டசாலிகள்!** ஆவோம்.

தேவ பிள்ளைகளே! தேவ வார்த்தைகள் **1 தெசலோனிக்கியர் 4:7**இல் **தேவன் தம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.** என்றுரைக்கிறது. ஆகையால் நாம் எப்போதும் பரிசுத்த வாழ்க்கை வாழ்வது அவசியமாகும். **எமது செயல்கள், சிந்தைகள் யாவும் எப்போதும் பரிசுத்தமாயிருப்பது அவசியம்.** இது மிக கஷ்டமான காரியமல்லவா? அப்படி ஜீவிப்பது எப்படி என்று உங்களுக்கு எண்ணத்தோன்றும் **ஆயினும் கலங்காதிருங்கள்!** நாம் எப்படி பரிசுத்தமாய் ஜீவிப்பது என்பதை தேவனுடைய வார்த்தைகள் எமக்கு வழிகாட்டுகிறது. தேவனுடைய வார்த்தைகளை கௌரவப்படுத்தி சத்திய வார்த்தைகளை மிக அவதானத்துடன் வாசித்து தேவ வசனங்கள் பிரசங்கிக்கப்படும் போது நன்றாக செவி கொடுத்து வருவோமாகில் **எங்கள் இருதயங்களில் தேவன் பேசுவார்.** மிகச் சாதாரணமாக, சுருக்கமாக சொல்லுவது எனில் **தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அதை பின்பற்றுபவர்கள் வாழ்க்கையில் பரிசுத்தம் ஜீவியம் ஜீவிப்பது கடினமான காரியமன்று.**

அன்புப் தேவ பிள்ளைகளே! இன்றைய செய்தியின் பிரதான தேவ வசனம் ஆத்மீகர்ளாகிய தேவபிள்ளைகள் தேவ பாதத்தில் ஜெபித்து நமஸ்கரிக்கும் போதும், **ஜெபிக்கும் போதும் உங்கள் கரங்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.** ஏனெனில் தாவீதுராஜா இவ் வார்த்தைகளில் கூறுகிறார் நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவிஅ உம்முடைய பீடத்தைச் சுற்றி வருகிறேன். **உங்கள் கரங்களினால் செய்யும் வேலைகளைக் குறித்து கவனமாயிருங்கள்.** யாருக்கும் விரோதமாய் **நீங்கள் கைகளினால் தீங்கு செய்தால் அது தேவகுமாரனுக்கு விரோதமாக செய்யப்படும் செயலாகும்.** ஏனெனில் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம் நாவினால் அருளிய வார்த்தை இப்படியாயிருக்கிறது என் சகோதரனான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்பதாகும். நீங்கள் உங்கள் கரங்களினால் செயலாற்றும் **எல்லாக் காரியங்களிலும்** கறை, திறையின்றி பரிசுத்தமான குற்றமற்ற செயல்களை மாத்திரம் செய்து, கரங்களை தூய்மையாக விளங்கச் செய்வேன். என்று கூறி **கரங்களை உயர்த்தி அர்ப்பணித்து ஜெபியுங்கள். இன்றைய நாள் வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் அன்புத் தகப்பனே! தாவீது ராஜாவைப் போல் நானும் குற்றமில்லாத பரிசுத்தமான கரங்களை உயர்த்தி மகிழ என்னையும் ஆசீர்வதியுங்கள். என் பெலவீனங்களை மாற்றி கிருபை செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம்,..." (உபாகமம் 7:6)

ஜீவ மன்னா

மார்ச் **06** வெள்ளி

## எப்பொழுதும் உங்களோடு வாசம் பண்ணும் ஆத்தும நேசர் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் அதி: 01 – 02

**"நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்."** (யோசுவா 1:9)

அளவற்ற தேவ அன்பினால் எம்மை வழி நடத்தும் ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் மகிமை பொருந்திய நாமத்தினால் தேவ பிள்ளைகளாகிய உங்களனைவரையும் **இப்புதிய தினத்திலே ஜெயம் பெற்றவர்களாய் மாறும்படி வாழ்த்துகின்றேன்.** உங்கள் வாழ்வினிலே நீங்கள் தனிமையாய் இருப்பதாக உணருகிறீர்களா? அல்லது **நீங்கள் சந்திக்கவிருக்கும் பிரச்சினைகள், நெருக்கங்கள், உபத்திரவங்கள், சவால்கள் நிமித்தமாய் இவைகளுக்கு எப்படி தீர்வைப் பெற்றுக் கொள்வது என எண்ணி துயரத்துடன் இருக்கிறீர்களா?** ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** ஏனெனில் உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் போகும் இடமெல்லாம் உங்களோடிருந்து **உங்களுக்கு உதவி ஒத்தாசைகள் செய்வார்.**

அருமையானவர்களே! இன்றைய செய்தியின் தலைப்பு வசனம் **யோசுவா 1:9**இல் ஆண்டவர் தம் திருவாயினால் மலர்ந்தருளிய பொருத்தனையாகும். **'நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே கலங்காதே நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.'** என்பதாகும். அன்று யோசுவாவுக்கு கொடுத்த அதே பொருத்தனையின் வார்த்தைகளை இன்று எனக்கும், உங்களுக்கும் கூறுகிறார் **ஆத்மீகர்களாகிய நாங்களும் அநேக வேளைகளில் நாங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், நெருக்கங்கள், சோதனைகளைக் குறித்து எண்ணி அதன் விசாலம் என்ன? அதினால் வரும் பாதிப்புகள் என்ன?** அதற்கு தீர்வு காண்பது எவ்வாறு? என்பதைக் குறித்து மாத்திரம் எண்ணப் பழக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். ஆனால் எமது சொந்த பிள்ளைகளாக மாறும்படியாக அழைத்த எமது ஆண்டவர் சகலவற்றையும் செய்ய வல்லவர் என்பதையும் **அவர் சகலவற்றிலும் பராக்கிரமம் மிக்கவர் என்பதையும் மனிதர்களுடைய வாழ்விலே அவர் அற்புத, அதிசய கிரியைகளைச் செய்ய வல்லவர் என்பதையும் மறந்து போனவர்களாய் செயல்படுகிறோம்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் தான் ஆத்மீக பிள்ளைகளாகிய நாங்கள் பிரச்சினைகள், இக்கட்டுகளுக்கு பயந்து எங்கள் ஆத்மீக வாழ்வினை தொடர முடியாது பின் தங்கி பின்மாற்றமடைகிறோம். ஆனால் **தேவன் யோசுவாவுடன் எப்படி நடந்தாரோ அவனோடு எப்படி வாசம் பண்ணினாரோ அவ்வண்ணமாகவே இன்றும் எம்மோடு வாசம் பண்ணுகிறார்.** அவர் எப்போதும் **எம்மோடிருக்கிறபடியால் கலங்காதே, திகையாதே திடமனதாயிரு** என்று இன்றும் எமக்கு உரைக்கிறார். ஏனெனில் அவர் எங்களோடிருந்து தேவ ஆவியால் எம்மை நிரப்பி எங்களை வழிநடத்தி முன்கொண்டு செல்கிறார். எங்களை வல்லமைப்படுத்துகிறார். சத்திய வசனங்களை எமது ஞாபகத்தில் கொண்டு வருகிறார். எம் பெலன் குன்றிப் போகும் போது **எம்மை தைரியப்படுத்துகிறார். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் அருமையான இரட்சகரே! அன்பின் தேவனே யோசுவா வுடன் இருந்தவரே! என்னுடனும் இருப்பவரே! எவ்வேளையிலும் என்னோடிருந்து எல்லாவற்றிலும் எனக்கு ஜெயம் கிடைக்கச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வசனம்

"...உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத்தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 15:20)

ஜீவ மன்னா
மார்ச் 07
சனி

## உங்களை பாதுகாக்கும் உயர்ந்த அடைக்கலமான சேனைகளின் கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம்
அதி: 03 - 04

**"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்."** (சங்கீதம் 46:7)

அன்பு நிறைந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ளவரும், பெரியவரும் மகா பெலனுள்ளவருமான நம் ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் உங்களை ஆசீர்வதித்து பெருகச் செய்யுமாறு வாழ்த்துகிறேன்.** இப் பூலோகத்தோர் யாவரும் தம் **ஜீவனைக் குறித்து உத்தரவாதமோ, பாதுகாப்போ அற்றவர்களாய் வாழ்கிறார்கள்.** மனிதனுடைய வாழ்விலே எந்த வேளையில் நாசமோ, மோசமோ, ஆபத்தோ ஏற்படும் என்பதை எம்மால் கூறமுடியாது. மனிதனுக்கு மானசீக குழப்பம் ஏற்பட்டு புத்தி பேதலித்த நிலமை ஏற்படலாம். மனநோய்கள், பாரதூரமான உயிர்க் கொல்லி நோய்கள் வரலாம். நோய்கள் உயிரை போக்கி விடலாம். நோயின் நிமித்தம் சரீரத்தின் உறுப்புகள் செயழிழந்து பரிதாபகரமான நிலைமைக்கு தள்ளப்படலாம். இதைத் தவிர விபத்துகள், ஆபத்துகள் மூலமும் **மனிதன் உயிரை இழக்கிறவனாய் இருக்கிறான்.**

தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! ஏனெனில் எம்மை பாதுகாக்கும்படியாக, **எம்மை சூழ்ந்து நிற்கும் கோட்டையாக, செயல் புரியுமாறு எம் தேவன் எம்மோடிருக்கிறார். சங்கீதம் 46:7**இல் இப்படி குறிப்பிடப்பட்டுள்ளது. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் என்பதாக. **தேவன் எமது அடைக்கலமான கோட்டை என்பதை எமது லௌகீக கண்களால் நேரடியாக காண முடியாது. ஆனால் ஆத்மீகர்களாகிய எம் ஆத்மீக கண்களால் இதை கண்டுணர முடியும்.** அப்படியாயின் எம் விசுவாசம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமே. எங்கள் ஆண்டவர் மாமகிமை வாய்ந்தவராகையால் அவருடைய மகிமையினால் எம்மை மறைத்து காத்தருளுவார்.

அன்பார்ந்தவர்களே! **நான் முப்பது வருடத்திற்கு முன்பாக பதினொரு வருடகாலமாக கேஸ்டிரிக் நோயாளியாகவே தேவ பாதத்தை நோக்கி வந்தேன்.** வந்த முதல் நாளே என் நோய் என்னை விட்டு நீங்கியது நான் பரிபூரண சுகத்தைப் பெற்றேன். அந்நாள் முதல் இந்நாள் வரையிலும் என் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என் உயர்ந்த அடைக்கலமாயிருந்து **எனக்கு பாதுகாப்பளித்து முன்னோக்கி நடத்திச் செல்கிறார்.** சமீபத்தில் என் விசுவாசம் சோதிக்கப்படும்படியாக என் பாதத்தில் ஒரு சிறு புண் ஏற்பட்டது. பல மாதங்கள் கடந்த பின்னரே இது **வெரிகோஸ் எனப்படும் நரம்புகள் சம்பந்தமான நோய் என அறிந்துக் கொண்டேன்.** என் அன்பர்களே! அநேகர் இதை சுகமாக்குவது கடினம் இந்த நோயினால் ஏற்படும் புண் ஆறாது என்றார்கள். **நான் விசுவாசத்தோடு என் தேவனை மாத்திரம் நோக்கி ஜெபங்களை ஏறெடுத்தேன்.** தற்போது காலிலிருந்த புண் சம்பூரணமாக சுகமடைந்ததுடன் எல்லா வேதனைகளும் என்னை விட்டு விலகிப் போனது என் உயர்ந்த அடைக்கலமாகிய சேனைகளின் கர்த்தர் என்னோடிருக்கிறார். **நீங்களும் விசுவாசத்தோடிருந்து வெற்றிப் பெறுங்கள். வெற்றிச் சிறந்த நல்நாள்!**

**ஜெபம்**

என் தேவனாகிய சர்வபராக்கிரமுள்ள தேவனே! இஸ்ரவேலரின் சேனைகளின் கர்த்தரே! யாக்கோபின் தெய்வமானவரே என் வாழ்விலும் உயர்ந்த அடைக்கலமாயிருந்து என்னை காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது." (சங்கீதம் 91:10)

ஜீவ மன்னா

மார்ச் 08 ஞாயிறு

# எம்மீது நினைவாயிருக்கும் கர்த்தர்!

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் அதி: 05 - 06

**"நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்;..."** (சங்கீதம் 40:17)

எனக்கருமை தேவ பிள்ளைகளே! தேவனுடைய அளவில்லா கிருபையினால் எமக்கருளப்பட்ட இப் புதிய நாளிலே தேவனுடைய பரிபூரணத்தால் நிறைந்து மனமகிழ்ச்சியுடன் வாழுமாறு ***ஜீவனுள்ள தேவனுடைய மகிமையின் அநுக்கிரகம் இறங்கி வருமாறு பிரார்த்திக்கின்றேன்.*** இன்றைய நாளிலும் இவ் இதமான காலை வேளையிலே உங்கள் உள்ளத்தில் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணும் நோக்கத்தோடு, பிரச்சினைகளை ***நீங்கள் சந்திக்க வேண்டிய நெருக்கங்கள், நிறைந்த உபத்திரவங்களை நினைவுப்படுத்திக் கொண்டிருக்கும் சாத்தானுடைய செயல்களை, உங்கள் முன்பாக திரைப்படத்தைப் போல் காண்பித்துக் கொண்டிருக்கும் அவனுடைய கிரியைகளுக்கு இடம் கொடாதீர்கள்.*** காலை நேரத்தில் உங்களை அதைரியப்படுத்தி உங்கள் விசுவாசத்தை தளரச் செய்து இன்றைய நாளின் தேவன் தரும் ஜெயத்தை பெற முடியாது உங்கள் வாழ்விலே தோல்வியை காணச் செய்யும் சாத்தானுக்கு இடம் கொடாதீர்கள்.

தேவ பிள்ளைகளே! ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** சர்வவல்லமையுள்ள தேவனானவரை முழு உள்ளத்தோடு விசுவாசித்து அவரை நம்பி அவரை மாத்திரமே பார்த்துக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகள் யாவரும் ***அதிர்ஷ்டமானவர்கள்!*** ஏனெனில் நாம் அவரிடம் வேண்டுதல் செய்யும் முன்னரே எமது தேவை என்னதென்று அவர் அறிந்து வைத்திருக்கிறார். நீங்கள் அஞ்ஞாதீர்கள். ஆத்மீக பிள்ளைகளை அவர்களுடைய ஆத்மீக பயணத்திலே பின் மாற்றமடையச் செய்து நித்திய ஜீவனை அடைய முடியாதபடி ***சாத்தான் கொண்டு வரும் கண்ணியே இந்த பயமுள்ள ஆவி.*** ஆகையால் சத்துருவானனுடைய உபாயங்களுக்கு இடம் கொடுத்து ஏமாற்றம் அடையாதீர்கள். இன்றைய நாளிலே உங்கள் வாழ்க்கை பயணத்தில் எதிரே வரும் ***பிரச்சினைகள், சவால்களை நினைத்து உங்கள் இருதயம் அதைரியப்பட அனுமதிக்காதீர்கள். உறுதியோடு தேவனைப் பற்றிக் கொள்ளுங்கள்.***

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து அநேக சந்தர்ப்பங்களில் எம்மை நோக்கிச் சொல்கிறார். ***பயப்படாதே*** என்று ***ஏசாயா 41:10, 43:1, 44:8 உபாகமம் 31:10*** வசனங்களிலும் இன்னும் அநேக வசனங்களுக்கூடாகவும் கூறுகிறார். இன்றைய நாள் எமது முதல் வசனம் ***சங்கீதம் 40:17***இல் எழுதப்பட்டுள்ளது. ஆண்டவர் எம்மை நினைவு கூறுகிறார் என்பதாக. நான் சிறுமையும் எளிமையுமானவன் கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார். ஆகையால் இன்று முதல் உங்கள் வாழ்க்கை எத்தரத்தில் இருப்பினும் ஆண்டவரையும் அவரது ஜீவனுள்ள வார்த்தைகளை விசுவாசித்து எதைக் குறித்தும் ***அஞ்ஞாதிருங்கள். நீங்கள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், சவால்கள், தொல்லைகள் யாவும் பயங்கரமும், விசாலமானதாக காட்டி உங்களை பயப்படுத்தி அதைரியப்படுத்த முற்படுவான்.*** ஏனெனில் அவனுக்கு எதிர்த்து உங்களை அழைத்த தேவனுடைய சர்வ பராக்கிரமத்தைக் குறித்து நினைத்து, நாவினால் வெளிப்படுத்தி உங்களை நீங்களே பெலப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது ***வெற்றிச் சிறந்த வாழ்வினை பெற்றுக் கொள்வீர்கள். ஜெயத்தின் நாள்!***

ஜெபம்

எனக்கருமையான அன்பு இயேசுவே! நீங்கள் என்னை நினைவு கூறுகிற தேவனானபடியால் நன்றி! சாத்தான் எப்பொழுதும் என் வாழ்க்கையிலே தோல்வி ஏற்படுத்த செயல்படுகிறவனாய் இருக்கிறான் என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னை நான் பெலப்படுத்திக் கொள்ளும்படியாக உதவி செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"...இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை."
(ஏசாயா 44:21)

ஜீவ மன்னா
மார்ச் 09 திங்கள்

## உங்கள் வாழ்வினை மனமகிழ்வாக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் அதி: 07 - 08

"...உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக."
(சங்கீதம் 5:11)

கர்த்தரின் நாமத்தை புகலிடமாக மாற்றிக் கொண்ட தேவனுக்கு அருமையான தேவ பிள்ளைகளே! இதமான இவ் அதிகாலை நேரத்திலே எல்லாம் புதியதாய் இருக்கும் இந்த உதய வேளையில் தேவனுடைய புதிய கிருபை, காருண்யம் அவரது சொந்த பிள்ளைகளை சூழ்ந்திருக்கும் **இவ்வேளையில் இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தில் இன்றைய தினம் மகிழ்ச்சியில் நிறைந்திருக்குமாறு வாழ்த்துகிறேன்.** பரலோகத்திலிருந்து எமக்கருளப்பட்ட தேவ குமாரன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு **அவரது நாமம் சர்வவல்லமை மிக்கது என அறிந்து விசுவாசிக்கிற நீங்கள் பாக்கியவான்கள்!**

தேவ பிள்ளைகளே! இன்றைய தலைப்பு வேதவசனம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நேசிக்கிறவர்கள் அவர் நாமத்தை நம்பிக்கையாய் கொண்டவர்கள் அவரில் அன்பு கொண்டோர் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள் என்பதை தெளிவுப்படுத்துகிறது. **சங்கீதம் 5:11**இல் உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து எந்நாளும் கெம்பீரிப்பார்களாக நீர் அவர்களைக் காப்பாற்றுவீர் **உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூறுவார்களாக எனக்கூறுகிறது.** ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! **நீங்கள் ஆண்டவருடைய நாமத்தை ஏற்றுக் கொண்ட நாள் முதல் ஆண்டவர் உங்களை விட்டு விலகாதவராய் உங்களோடிருக்கிறார்** உங்களை அவர் வாழ்க்கை பயணத்தில் சரியான வழியில் நடக்கும்படி உதவி செய்து ஆலோசினையைத் தருவார். **பரி.யோவான் 14:18**இல் **நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் உங்களிடத்தில் வருவேன்** என்று கூறியுள்ளார். அதன்படி இயேசுகிறிஸ்து **பரிசுத்த ஆவியானவராக எம் உள்ளத்தில் வாசம் பண்ணுகிறார்.** எம் வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைகளை எமக்களித்து எங்கள் வாழ்வினை வளப்படுத்தி செழிக்கச் செய்கிறார்.

அருமையானவர்களே, எம் வாழ்வினை எதிர் நோக்கும் ஆபத்துகள், பிரச்சினைகளை முன்கூட்டியே எமக்கு வெளிப்படுத்தி எம்மை பாதுகாத்துக் கொள்வார். அவர் நாமத்தை நேசிக்கிறவர்கள் எந்நேரமும் அவர் நாமத்தை உச்சரித்து பெலன் கொள்பவர்கள் யாவருடைய ஜீவியத்தை காப்பாற்றி வழி நடத்துவார். அதே போல் அவர்களுடைய வாழ்விலே இல்லாமை, வறுமை, பற்றாக் குறைகள் ஏற்படாது அனைவரையும் ஆசீர்வதித்து சகலவற்றிலும் பெருகப்பண்ணுவார். நான் எனது ஆத்மீக வாழ்வின் **இந்த முப்பது வருட ஊழியப்பாதையிலே இயேசுவின் நாமத்தை நேசித்து அவரது நாமத்தில் அன்புக் கொண்டு அவருக்கு சேவை செய்து வரும் என்னை என் வாழ்வினை அநேக ஆசீர்வாதங்களால் நிரப்பியுள்ளார்.** எல்லா சந்தர்ப்பங்களிலும் அவரது ஈவுகளை சொல்லி அவர் எனக்கு தரும் நன்மையின் ஆசீர்வாதங்களை கூறி அவரில் மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன். நீங்களும் அவ்வாறே அவரது நாமத்தை நேசித்து **அவரில் அன்பு கூர்ந்து ஆசீர்வாதங்களைப் பெற்று ஆனந்தமாய் வாழ்ந்திருங்கள் இன்று ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் அன்புத் தேவனே! உங்கள் தேவ குமாரனுக்காய் உங்களுக்கு நன்றி! நான் அவரை நேசிப்பதால் அநேக ஆசீர்வாதங்களுக்கு சொந்தக்காரனாக மாறினேன். எனக்கு கிடைத்த மனமகிழ்ச்சியின் ஆசீர்வாதத்திற்காய் ஸ்தோத்திரம்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே. ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்." (பரி.யோவான் 15:11)

ஜீவ மன்னா

மார்ச் 10

செவ்வாய்

# வெகுதூரம் பிரயாணம் போகும்படி ஆத்துமாவிலே பெலன் கொள்வோம் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் அதி: 09 - 10

**"கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான்."** (1 இராஜாக்கள் 19:7)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய ஜீவிக்கின்றவரும் பலத்த கிரியைகளை நடப்பிக்கிறவருமான இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தால் ***இப்புதிய தினம் ஜெயம் நிறைந்த நன்மையான நாளாய் அமையுமாறு ஆசீர்வதிக்கிறேன்.*** எமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறுகிறார். ***பரி.யோவான் 15:16***இல் ***நீங்கள் என்னைத் தெரிந்துக் கொள்ளவில்லை நான் உங்களை தெரிந்துக் கொண்டேன்.*** இந்த சத்திய வசனத்தின்படி எம் இரட்சகர் இயேசுகிறிஸ்து எம்மை தம்மிடம் அழைத்துக் கொண்டான். ***இந்த அழைப்பினால் நாங்கள் விஷேசித்தவர்களானோம்.***

தேவ பிள்ளைகளே! மனிதன் எமக்கு என்ன தகமைகள், தகுதிகள் உண்டென பார்க்கிறான். ஆனால் பரத்திலே வாசம் பண்ணும் எங்கள் பிதாவானவர் எமது தராதரத்தைப் பாராதபடி கிறிஸ்துவுக்குள்ளாய் ***எம்மை தமது சுயாதீனத்தின் பிள்ளைகளாய் மாற்றியது நாம் பெற்றுக் கொண்ட மகாப் பெரிய சலாக்கியமாகும்.*** கர்த்தர் எம்மை வெறுமனே அழைக்கவில்லை. ஆண்டவர் இயேசு சொல்லியிருக்கிறார் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன் நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன் ***பரி.யோவான் 14***இன்படி இயேசுகிறிஸ்துவின் மூலம் எம்மை தேவன் அழைத்தது ***இப் பூவுலக வாழ்வின் ஆசீர்வாதங்களுக்கூடாய் நாம் மகிழ்ந்திருக்க மாத்திரமல்ல,*** நாங்கள் சதாகாலங்களிலும் ஜீவிக்கிறவர்களாய் அவரோடு பரலோகத்தில் வாசம் பண்ணும்படியாய் எமக்கு சொந்த வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணியுள்ளார். அவரோடு மகிழ்ந்திருக்கும்படி எம்மை அழைத்துச் செல்வார் என்பதை அறியத் தந்துள்ளார். மேலே காணப்படும் எம் செய்தியின் ஆரம்ப அருள் வார்த்தைகளை ***1 இராஜாக்கள் 19:7***இல் தேவனுடைய தூதனால் எலியாவிற்கு கூறப்பட்டது.

தேவ பிள்ளைகளே! கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனை தட்டியெழுப்பி எழுந்திருந்து போஜனம் பண்ணு நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகு தூரம் என்றான். ***இஸ்ரவேலரின் ராஜாவாகிய ஆகாப் தன் மனைவியாகிய யேசபேலுக்க எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை கொன்று போட்ட செய்தியை அறிவித்தான்.*** யேசபேல் எலியாவின் பிராணனை வாங்குமாறு சேவகர்களை அனுப்பியிருக்கிறாள் என்ற செய்தியை அறிந்த எலியா தன்னைக் காத்துக் கொள்ளும்படியாக வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய் ***கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று ஜெபித்து சூரைச் செடியின் கீழ்ப்படுத்து நித்திரைப் பண்ணினான்.*** கர்த்தருடைய தூதன் தோன்றி தழலில் சுட்டப்பட்ட அடையும் ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவனருகே வைத்து எழுந்திருந்து போஜனம் பண்ணும்படி கூறினான். ***எலியாவிற்கு போல் உங்களுக்கு அடை கிடையாமற் போனாலும் உன்னதமானவருடைய சத்திய வசனங்கள் உங்கள் கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.*** அது உங்கள் ஆத்மீக ஆகாரமாகும். நாள் தோறும் நீங்கள் அதை போஜனம் பண்ணுவீர்களாகில் உங்கள் ஆத்துமா பெலனடையும். ஆத்மீக வாழ்க்கை பயணத்தில் முன்னேறுங்கள். **வெற்றி மிகுந்த நல்நாள்!**

**ஜெபம்**

என் நல்ல தேவனே! எலியாவின் ஆத்துமாவையும், சரீரத்தையும் பெலனடையச் செய்தவரே! நானும் உங்கள் பிள்ளையாகிய என்னையும் ஆத்துமாவிலும், சரீரத்திலும் பெலப்படுத்தும்படியாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்." (சங்கீதம் 81:16)

**ஜீவ மன்னா**
மார்ச் **11**
புதன்

## உங்கள் ஜெபங்கள் சத்துருக்கள் பின்னிட்டு ஓடச் செய்யும் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம்
அதி: 11 – 12

**"நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்."** (சங்கீதம் 56:9)

அன்பான தேவ பிள்ளைகளே! இருளின் அதிகாரத்தினின்று எம்மை விடுதலையாக்கி எம்மை தமது அன்பிற்கு பாத்திரவான்களாய் மாற்றிக் கொண்ட ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் திரு நாமத்தால் **இந்நாள் சந்தோஷம் நிரம்பி வழியும் நல்ல நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** இந்த மனரம்மியமான காலைப் பொழுதினிலே ஜீவ மன்னா இன்றைய செய்தியை ஆவலோடு வாசிக்கும் அன்பு உள்ளங்களே இன்று உங்கள் அனைவருக்கும் **உங்கள் வாழ்க்கைக்கு விரோதமாக கிரியைகளை செய்யும் சத்துருவானவனைக் குறித்து சில விடயங்களைத் தேவன் அறியத் தருகிறார்.**

அருமையான பிள்ளைகளே! **பரி.யோவான் 5:19**இல் எழுதப்பட்டுள்ளது. **நாங்கள் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும் உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிதென்றும் அறிந்திருக்கிறோம்.** ஆகையால் தேவ பிள்ளைகளுக்கு விரோதமாக உலக மனிதர்கள் எத்தகைய துஷ்ட செயல்களையும் செய்யலாம். **எங்கள் விரோதிகளான பொல்லாத ஆவிகளின் சேனைகள் எம்மை அழிக்கும்படியாக,** உலக மனிதர்கள் அநேக விரோதமான காரியங்களை செய்யும்படி தூண்டுவான் என்பதை நாம் அறிந்திருப்பதால் **தீங்கை உண்டாக்கும் சாத்தானுக்கும் அதனுடைய சேனைகளுக்கும் எதிர்த்து நிற்க வேண்டியது அவசியமாகும்.** இதற்காய் நாம் ஆவியானவருடைய வல்லமையை பெற்று கொள்ள வேண்டும். ஏனெனில் அருபிகளாய் கிரியை செய்யும் **பொல்லாத ஆவிகளின் சேனையை தோல்வியடையச் செய்ய எமது சரீர பெலனோ திறமைகளோ, கல்வித் தகமைகளோ முடியாது.** ஏனெனில் எமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவரது சீஷர்களுக்கு கூறினார் **'இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்... (பரி.லூக்கா 10:19).**

தேவ பிள்ளைகளே! இந்த வல்லமையை பெற இந்த அதிகாரத்தை நாம் பயன்படுத்த **நாம் தேவ பாதத்தில் ஜெபங்களை ஏறெடுப்பது அவசியமாகும்.** மேலே தரப்பட்ட வேத வசனம் **சங்கீதம் 56:9**இல் **'நான் உம்மை நோக்கி கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள். தேவன் என் பட்சத்தில் இருக்கிறார்.....'** இது தாவீது ராஜாவினால் எழுதப்பட்டது. தாவீது **ராஜாவிற்கு விரோதமாக எழும்பிய மனிதர்கள் யாவருக்காகவும் அவர் தேவனுடைய பாதத்தில் வியாகூலப்பட்டு ஜெபித்த ஜெபங்களினால் தமது துஷ்ட கிரியைகளினால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை** கர்த்தர் தாவீது ராஜாவை எதிரிகளிடமிருந்து இரட்சித்தார் விரோதிகள் வந்த வழியாக அல்ல வேறு பாதைகளில் பின்னிட்டு திரும்பினார்கள். இன்றைய நாளில் உங்கள் நிலவரம் எப்படியாயினும் அதைக் குறித்து துக்கமடைந்து பிசாசினால் இந்நிலமை ஏற்பட்டது என்று எண்ணி வெறுமனே இராமல் **தேவ பாதத்தில் முழங்கால்படியிட்டு ஜெபம் செய்யுங்கள். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் பிதாவே! தாவீது ராஜா உங்கள் சமூகத்தில் ஜெபித்த போது சகல விரோதிகளையும் பின்னிட்டு திரும்பச் செய்தவரே நானும் உங்கள் சமூகத்தில் ஜெபிக்கிறேன். இயேசுவே என்னையும் வல்லமைப்படுத்தி ஆசீர்வதியும் இயேசு ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்." (உபாகமம் 28:7)

ஜீவ மன்னா

மார்ச் 12
வியாழன்

# உங்கள் வாழ்விலே தேவனுடைய சித்தம் நிறைவேறுவதாக !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் அதி: 13 - 14

**"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்."** (நியாயதிபதிகள் 6:12)

அன்பான தேவ பிள்ளைகளே! ***ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிமையான நாமத்தினால் இந்நாள் மன மகிழ்ச்சி நிரம்பிய நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன்.*** உயிரோடிருக்கிற உன்னத தேவனைப் பற்றி அறிந்தவர்களாய் ***அவரது சொந்த பிள்ளைகளாய் இருக்கும் நாமனைவரும் அதிர்ஷ்டமானவர்களே!*** ஏனெனில் அவரை அறிந்து கொண்ட நாள் முதலாய் அவரையே முழு உள்ளத்துடன் விசுவாசித்து ***எம் வாழ்வினை அவர் கரத்தில் ஒப்புவித்து நான் தொடக்கம் எம்மடைய கை தளராத வண்ணம் எம்முடனேயே இருக்கிறார்.***

தேவ பிள்ளைகளே! உலக மனிதர்கள் தமது வாழ்வினைக் குறித்து அநேக எதிர்பார்ப்புகள், கற்பனைகள், கனவுகள், ஆசைகள் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இருந்தாலும் வாழ்க்கையில் இவைகள் நிறைவேறும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. சிலருடைய வாழ்வில் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது போனபடியால் ***தங்கள் வாழ்நாள் முடிவுபரியந்தம் கண்ணீருடனும், கவலையுடனும் வாழ்பவர்களாயும் இருக்கிறார்கள்.*** ஆயினும் ***'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!'*** உங்கள் வாழ்வின் எதிர்பார்ப்புகள் இடிந்து போன நிலமையிலிருப்பினும் அதைக் குறித்து எண்ணாதிருங்கள். ஏனெனில் இன்றைய எமது பிரதான வேதவாக்கியம் குறிப்பிடுகிறது கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு தரிசனமாகி பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றுரைத்தார். ***அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி, ஆ! என் ஆண்டவரே கர்த்தர் எங்களோடிருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்.*** கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு மீதியானியர் கையில் கையில் எங்களை ஒப்புக் கொடுத்தாரே என்றான்.

அப்பொழுது ***'கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய் உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.'*** அதற்கு அவன் ஆ என் ஆண்டவரே நான் இஸ்ரவேலரை எதினாலே இரட்சிப்பேன். இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். அதற்குக் ***கர்த்தர் நான் உன்னோடே கூட இருப்பேன் ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல் நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்.*** இதன் மூலம் நாம் அறிவது ஆண்டவருடைய தூதனானவர் கிதியோனுக்கு தரிசனமானதன் பின் ***அவனது சிந்தை, யோசனைகள் ஒன்றுமே செயல்படவில்லை.*** அதன் பிறகு நடைபெற்றது தேவ சித்தம் மாத்திரமே ***உங்களை பெலப்படுத்தும், தைரியப்படுத்தும் தேவன் உங்களோடிருக்கிறார். ஜெயம் தரும் நல்ல நாள்!***

ஜெபம்

பராக்கிரமசாலியான என் பரலோக தேவனே! நீங்கள் என்னை
பெலப்படுத்தவும், தைரியப்படுத்தவும் வல்லவர் கிதியோனோடு இருந்து அவர்
மூலம் உங்கள் சித்தம் நிறைவேறச் செய்தவரே! என்னிலும் உங்கள் சித்தம்
விளங்கும்படியாக என்னையும் வழிநடத்தும்படியாக
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் . ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார்; அவரைத் திருப்பத்தக்கவர் யார்? அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார்." (யோபு 23:13)

ஜீவ மன்னா

மார்ச் 13

வெள்ளி

## நீங்கள் தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததிக்கு உரியவர்கள் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் அதி: 15 - 16

"...நீங்களோ, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்." (1 பேதுரு 2:9 )

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எம் கர்த்தரும் அருமையான இரட்சகருமான ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தால் தேவ பிள்ளைகளாகிய உங்களை வாழ்த்துகிறேன்.** இன்றைய தினமும் நல்ல நாளாகவே அமைவதாக. உலக மாந்தர்கள் மனிதன் உலகில் தோன்றியதைக் குறித்து அனேக கட்டுக்கதைகளைக் கூறலாம். இது எப்படியாயினும் விண்ணையும், மண்ணையும் உண்டாக்கினவரும் ஜீவனுள்ள சகல ஜீவராசிகளையும் படைத்தவருமான சர்வ வல்லமை பொருந்திய தேவ பிதாவைக் குறித்து அறிந்து **அவர் மீது விசுவாசம் உள்ளவர்களாகிய நாமனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களும், அதிர்ஷ்டசாலிகளுமாகும்.** ஏனெனில் அவரை விசுவாசித்து வாழ்பவர்களை நிறைவாக **ஆசீர்வதிக்கும் தேவனாக இருக்கிறார்.**

**உலக மனிதர்கள் மத்தியிலே குலம், கோத்திரம், ஜாதி, சந்ததி, மதம் என அனேக பிரிவுகளில் கட்டப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.** குலம், கோத்திரம், ஜாதி என்னும் அடிப்படையிலே **உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என தங்களை தாங்களே வேறுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.** இன்றைய தினம் எமது மன்னா செய்தியின் பிரதான வசனமாகிய **1 பேதுரு 2:9** இல் **'ஒரு சந்ததியின் விஷேசித்த காரியத்தை வெளிப்படுத்துகிறது. அதாவது எவ்வளவு தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்நதவனாக இருப்பினும் அவனை உயர்ந்த ஜாதியாக மாற்றும் ஒரு சந்ததி உண்டு என்பதாக.'** அதாவது ஜீவிக்கிற தேவன் ஒருவர் உலகில் இருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியாக கிரியை செய்கிறார். தம்மை நேசிப்பவர்களுக்கு அருள் புரிகிறார். விசுவாசிகளாக விளங்கும் மனிதர்களாகிய நானும், நீங்களும் கர்த்தரால் உலகத்திலிருந்து தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததிகளாய் இருக்கிறோம். **நாங்கள் அவரின் பரிசுத்த ஜாதி அவரை ஏற்றுக் கொண்டு அவர் வழியில் நடக்கின்ற யாவரும் பரிசுத்த ஜாதிகளாக காணப்படுகிறார்கள்.**

ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததியைக் குறித்து அவர் விஷேசித்த கவனம் செலுத்துகிறார். **பரி.மத்தேயு 10:29**இல் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளின்படி **'ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா?'** ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளின் ஒன்றாகிலும் தரையிலே விழாது என்றும் எழுதப்பட்டுள்ளது. **ஆதலால் பயப்படாதிருங்கள்** அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் **நீங்கள் விஷேசித்தவர்களாயிருக்கிறீர்கள்!** என்று கூறியுள்ளார். இதன்படி அவர் படைத்த மனிதர்கள் யாவரையும் அவர் நேசிக்கிறார். யாவரும் அவருக்கு அருமையானவர்களே அதிலும் அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட அவரது சொந்த ஜாதியாக மாற்றப்பட்டவர்கள் எவ்வளவு அருமையானவர்களும், பெறுமதி மிக்க சொத்தாகவும் அவருக்கு காணப்படுவார்கள். நீங்கள் அவருக்கு **விலையேறப்பெற்ற மதிப்பிட முடியாத பொக்கிஷமாகும். இன்று ஆசீர்வாதத்தின நாள்!**

ஜெபம்

என் அன்பான தேவனே! இவ்வுலகிலிருந்து என்னை தெரிந்துக் கொண்டு உங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டீர்கள். தேவரீர் என்னை உயர் ஜாதியாக ஆசீர்வதித்திருப்பதால் நன்றி!
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது."
(யாத்திராகாமம் 19:6 )

| | | |
|---|---|---|
| ஜீவ மன்னா<br>மார்ச் 14<br>சனி | அந்தகாரத்தின் அதிகாரங்கள் உங்களை அடிமைப்படுத்த முடியாது ! | இன்றைய வேதவாசிப்பு<br>எண்ணாகமம்<br>அதி: 17 – 18 |

**"அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை."** (பரி.யோவான் 1:5)

தேவனுடைய பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தை உயர்த்தி **இன்றைய நாள் தேவனால் உங்களிக்கப்படும் நன்மையான ஈவுகள் நிரம்பிய நல்ல நாளாய் இருக்குமாறு ஆசீர்வதிக்கிறேன். 'உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி'** என்று **பரி.யோவான் 1:9இல்'** குறிப்பிட்டுள்ளது. **'அந்த மெய்யான ஒளி இயேசுகிறிஸ்துவே ஏனெனில் நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்.'** என்று **பரி.யோவான் 8:12இல்** இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார்.

அன்பார்ந்தவர்களே! உலகிலே அந்தகாரத்திலே ஜீவித்த என்னையும், உங்களையும் பரலோக தகப்பனாகிய பரம பிதா அவரது ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தம்மிடமாய் அழைத்த **பரலோக ஜீவியத்தை எமக்கருளினார். அந்த வாழ்வே எமக்கு ஒளியாக மாறியது.** தேவ குமாரன் மூலமாக எம் வாழ்விற்கு ஒளி கிடைத்தது. நாம் அவரில் நிலைத்திருந்தால் எம் வாழ்விலே ஒளியானதாய் இருக்கும் **நாங்கள் வெளிச்சத்தில் வாழ்கிறவர்களாய் இருக்கிறோம்.** உதாரணமாக சொல்ல வேண்டுமெனில் நீங்கள் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு உங்கள் சரீரத்தில் அசுத்த ஆவி கிரியை செய்யாதபடியால் துன்பமடைந்தீர்கள் அல்லவா? நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட நாளில் தேவனுடைய மகிமைக்கும், வல்லமைக்கும் முன் தோல்வியடைந்து **அசுத்த ஆவி உங்கள் சரீரத்தை விட்டு நீங்கிப் போயிற்று அல்லவா?** நீங்கள் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவுடன் பரிசுத்த ஆவியானவர் **உங்களில் வாசம் பண்ணும்படியாக உங்கள் உள்ளத்தில் வருகிறார்.** அப்போது அந்தகாரத்தின் அசுத்த ஆவியால் உங்கள் சரீரத்தில் செயல்பட முடியாது போகிறது. ஆகையால் உங்கள் சரீரத்தை விட்டு ஓடிப் போகிறது.

ஒளி வீசும் இடத்தில் இருள் இருக்க முடியாது. இன்றைய பிரதான சத்திய வசனம் இதையே வெளிப்படுத்துகிறது. **அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை என்பதாக. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உலகம் இருள் சூழ்ந்த நிலையில் இரவில் ஆழ்ந்திருந்த போதும் உதய சூரியனின் ஒளிக்கதிர்களால் தோல்வியடைந்து இருள் விலகி ஓடுகிறது. வெளிச்சம் பூமியை ஆட்கொள்ளுகிறது. உலகம் முழுவதும் வெளிச்சத்தை பெறுகிறது. அதே போல் எம் உள்ளங்களிலும் இயேசுகிறிஸ்து ஆளுகை செய்யும்படியாய் எங்கள் வாழ்க்கை சீர்படும்போது, அந்தகாரங்களில் தீய சக்திகள் எம்மில் செயல்பட முடியாது. **எம்மை வெற்றிக் கொள்ள முடியாது. ஜெயக்கிறிஸ்து எம்மோடிருக்கிறார். ஜெயம் பெறும் நந்நாள்!**

**ஜெபம்**

அன்பான என் இயேசுகிறிஸ்துவே! உலகிற்கு ஒளியானவரே! என்னை உங்கள் பிள்ளையாக மாற்றி என் வாழ்விற்கு ஒளியானீர்கள் உங்கள் அழைப்பினால் என் வாழ்வின் இருள் நீங்கியது. சத்துருவானவனுக்கு எனக்கு எதிராக கிரியை செய்ய முடியாமல் போனபடியால் உங்களுக்கு நன்றி!
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்." (1 யோவான் 3:8)

| ஜீவ மன்னா | என் பிராணனை அழிவுக்கு விலக்கி காக்கும் தேவன் ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| மார்ச் 15 ஞாயிறு | | எண்ணாகமம் அதி: 19 – 20 |

**"இதோ, தேவன் எனக்குச் சகாயர்; ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார்."** (சங்கீதம் 54:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இப்புதிய நாளின் விடியல் பொழுதினில் ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் பலத்த அபிஷேகம் இறங்குவதாக துன்பப்படுபவர்களுடைய வாழ்க்கையில் இன்னல்கள் மறைவதாக.** சகலரும் நிறைவான ஆசீர்வாதங்களை பெற்று ஆத்துமாவிலே மகிழ்ந்திருக்கும்படி வாழ்த்துகிறேன். உங்களை படைத்தவராகிய கர்த்தாதி கர்த்தர் உங்களை குணமாக்கும் தெய்வமாக விளங்குவதால் உங்கள் சரீரத்திலும், ஆத்துமாவிலும் உங்களை வாதிக்கும், சகல வியாதிகளும், உபாதைகளும் நீங்கி ஓடும்படி செய்து **உங்களை இரட்சித்து உடலுக்கும், உள்ளத்திற்கும், ஆத்துமாவிற்கும் தெய்வீக சுகத்தை தருவார். ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

இன்றைய **தின மஞ்சரியின்** பிரதான ஜீவ வார்த்தை தாவீது ராஜாவின் **சங்கீத புத்தகம் 54:4**இல் இதோ **தேவன் எனக்கு சகாயர் ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார் என்பதாகும்.** இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலும், யுத்த வீரர்களும் பெலிஸ்தியரோடு யுத்தம் செய்துக் கொண்டிருந்தார்கள். கோலியாத் **என்னும் பெயருள்ள பெலிஸ்த போர் வீரன் இஸ்ரவேலருக்கு எதிராக எழும்பினான்.** இவன் ஆறடிக்கு மேலான உயரமுள்ளவனும், மல்யுத்த வீரனாகவும் இருந்தான். இஸ்ரவேலரையும், ராஜாவையும் ஜீவனுள்ள தேவனையும் நிந்தித்து பேசிக் கொண்டிருந்தான். **அவனோடு யுத்தம் செய்ய வரும்படி யுத்தவீரர்களுக்கு சவால்விடுத்துக் கொண்டிருந்தான்.** இவ்வாறான கோலியாத்தின் வீராப்பைக் கண்டு **சவுல் ராஜாவும், யுத்த வீரரும் மிகவும் பயத்துடன் காணப்பட்டார்கள்.** ஆனால் தன் சகோதரருக்கு உணவுப் பண்டங்களை கொடுத்து விட்டு நலம் விசாரித்து விட்டுச் செல்லும்படியாக யுத்த களத்திற்கு வந்திருந்த **தாவீது என்னும் வாலிபன் பெலிஸ்தியனாகிய கோலியாத்தின் வார்த்தைகள் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்த சொற்கள் அவனுக்கு விரோதமாக யுத்தம் செய்ய தூண்டியது.** அந்த பெலிஸ்தியனோடு தாவீது யுத்தம் பண்ணும்படியாக இருந்த ஆயுதம் **ஐந்து கூழாங்கற்களும் அவனுடைய கவணுமாகும்.** இதன் மூலம் பெலிஸ்தியனை தரையிலே விழச்செய்து அவனுடைய பட்டயத்தைக் கொண்டே கோலியாத்தைக் கொன்று அவனுடைய தலையை வெட்டிப் போட்டான்.

தேவ பிள்ளைகளே! அதன் பிறகு சவுல் ராஜா தாவீதை தன்னிடத்தில் தனது மாளிகையிலே வைத்துக் கொண்டான். அவனை ஆயிரம் பேருக்கு அதிபதியாக வைத்தான். இஸ்ரவேலரும் யூதா ஜனங்களுமாகிய யாவரும் **தாவீதைச் சிநேகித்தார்கள். இதனால் எரிச்சலடைந்த சவுல் ராஜா பல தடவைகள் தாவீதை கொலை செய்ய முயற்சித்தான்.** ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இஸ்ரவேலின் தேவன் தாமே தாவீதுடன் கூடயிருந்து **அவனது உயிருக்கு ஆபத்து ஏற்படாதவாறு காத்துக் கொண்டார்.** அவனுக்கு ஒத்தாசை செய்தார். அதே போல் உங்களுக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாதவாறு காத்து உதவி ஒத்தாசைகள், உபகாரங்கள் செய்வார். **அவர் உங்கள் மீது மிக அக்கறை உள்ளவராய் இருக்கிறார். இன்றைய தினம் வெற்றிச் சிறந்த நல்நாள்!**

**ஜெபம்**

என் பரலோக பிதாவே! இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் பிராணனை அழிவுக்கு விலக்கி காத்துக் கொண்ட தேவனாய் இருக்கிறீர்கள். அதே போல் எங்களுக்கும் தேவனாய் விளங்குபவரே! எம் உயிரையும் ஆபத்துக்களை நீக்கி காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்;..." (ஏசாயா 54:17)

| ஜீவ மன்னா | எம் கர்த்தர் என்றுமே மாறாதவராய் இருக்கிறார் ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| மார்ச் 16 திங்கள் | | எண்ணாகமம் அதி: 21 – 22 |

"நான் கர்த்தர், நான் மாறாதவர்;..." (மல்கியா 3:6)

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், வானங்களில் உயர்ந்தவருமான ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் மகிமை பொருந்திய நாமத்தினால் இன்றைய நாள் நல்ல நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** இவ்வுலகில் வாழும் ஜனங்களிலே பெரும்பாலோனோர் தமது கால நேரம், பணம், சொத்து போன்றவற்றை விரயம் செய்து தமது வாழ்வில் கிட்டாத அந்த **விடுதலை, தீர்வு, சமாதானம், சந்தோஷம்** இவைகளை பெறும்படி வாஞ்சித்து அலைகிறார்கள். ஆனால் அனேகர் இதனால் பிரதிபலனை பெற முடியாது. யாவும் நிர்மூலமாக்கப்பட்டுப் போன நிலைமையை அடைகிறார்கள். ஆயினும் **தேவ பிள்ளைகளே! நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் இஸ்ரவேலின் தேவன் உங்களோடிருக்கிறார்.**

அன்பானவர்களே! இன்றைய தினம் எமக்கு தேவன் அருளிய வேத வசனம் **மல்கியா 3:6**இன்படி **'நான் கர்த்தர் நான் மாறாதவர் என்பதாகும்.'** இந்த வாக்கு இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டதாகும். ஆயினும் **'சர்வ பூமியின் தேவன் என்றும். இதோ மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்'** என்றும் **ஏசாயா 54:5**இல் **எரேமியா 32:27**இல் வேதத்தில் எழுதப்பட்டிருப்பதால் இஸ்ரவேலின் தேவன் எங்கள் தேவனாக இருக்கிறார். என்பது நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது என்று **இஸ்ரவேலருக்கு வாக்களித்தவரும் இன்று எமக்கு வாக்களிப்பவருமான கர்த்தர் என்றும் மாறாதவராய் இருக்கிறார்.** தேவ பிள்ளைகளே! **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விசுவாசியுங்கள்** எம் வாழ்வினை ஆண்டவரின் கரங்களில் ஒப்படைப்போம் தேவ கட்டளைகளை எம் சிரம்மேல் கொண்டு அவைகளுக்கு கீழ்படிந்து பிரமாணங்களின்படி வாழ்வோம். தேவனுக்குகந்தவர்களாய் நாம் மாறி பரிசுத்தமாய் ஜீவிக்கிறவர்களாய் இருப்போமாகில் நாங்கள் பாக்கியவான்களாவோம். ஏனென்றால் **மல்கியா 3:12**இல் அவரின் வார்த்தைகள் இதை குறிப்பிட்டுள்ளது. **அப்போது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்.** தேசம் விரும்பப்படத்தக்கதாகயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்பதாகும். ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

உங்கள் வாழ்வினிலே நீங்கள் சந்திக்கும் உபத்திரவங்கள், பிரச்சினைகள், போராட்டங்கள், வேதனைகள், துன்பங்கள் இவைகளால் உள்ளம் சோர்வடைந்து வாழ்க்கை சுவையற்றதாய், கசப்பாய் இருக்கிறதா? இன்று இப்போதே நீங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய எங்களை படைத்த ஆண்டவரிடம் உங்கள் வாழ்வினை அர்ப்பணியுங்கள். அப்போது ஆண்டவர் உங்கள் வாழ்விலுள்ள சகல உபத்திரவங்களிலும் இன்னல் இக்கட்டுகளிலிருந்து விடுவிப்பார். உங்கள் வாழ்க்கையின் கேள்விக்குறிகளுக்கு பதிலளிப்பார். சவால்களில் ஜெயம் தருவார். வாழ்க்கையின் கசப்புகளை **இனிப்பாக** மாற்றுவார். இக்கட்டினின்றி இதமாய் நிறைவாய் வாழ்ந்திட **ஆசீர்வதிப்பார்! ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

பரிசுத்த தேவனே! என்னை நேசிப்பவரே! இஸ்ரவேலின் தேவனாய் இருந்து ஜெயம் அளித்தவரே! இன்றும் மாறாதவராய் கிரியை செய்பவரே! உங்கள் மீது அளவில்லா விசுவாசத்தோடு என் வாழ்வினை உங்கள் கரங்களில் தருகிறேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்." (வெளிப்படுத்தல் 1:8)

ஜீவ மன்னா

மார்ச் 17 செவ்வாய்

## உங்களுக்கு தெளிந்த அறிவைத் தரும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் அதி: 23 – 24

"...கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்." (2 தீமோத்தேயு 2:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **உங்களுக்கொரு மகிழ்ச்சிகரமான நாள் உதயமானபடியால் ஸ்தோத்தரிக்கின்றேன்.** அதி உன்னதமான மேன்மையான பரிசுத்த தேவனைக் குறித்து அறிந்து, வெளிப்பாடுகளை நீங்கள் பெற்றுள்ளபடியால் **நீங்கள் மிகவும் பாக்கியவான்கள்.** ஏனெனில் கர்த்தர் **ஓசியா 4:6**இல் "**என் ஜனங்கள் அறிவில்லாமையால் சங்காரமாகிறார்கள்**" என்று கூறுகிறார். ஆகையால் உலகில் அனைத்து மக்கள் மத்தியில் எம்மை உருவாக்கிய தேவனைக் குறித்து அறிந்துக் கொண்ட நீங்கள் **அதிர்ஷ்டக்காரர்** அல்லவா?

தேவ பிள்ளைகளே! இவ்வுலகில் கண்களுக்கு புலப்படாத செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் அநேக சந்தர்ப்பங்களில் மனிதனால் அவைகளைப் புரிந்துக் கொள்ள முடிவதில்லை என்பதையும் அறிவீர்கள். ஆனாலும் **கலங்காதிருங்கள்!** மேலே குறிப்பிட்ட **2 தீமோத்தேயு 2:7**இல் வேதாகம "**வசனத்தில் கர்த்தர் எல்லாக் காரியங்களையும் நாம் அறிந்துக் கொள்ள புத்தியை தந்தருளுவார்.**" என்று கூறப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளே! நான் இன்று கூறுகின்றேன். உலகத்திலுள்ள மற்ற மனிதரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் உலகத்தின் உயர்கல்வி எனக்கில்லை அப்படியே நான் இயேசுவை ஏற்றுக் கொண்டு **தேவ இராஜ்யத்தின் ஊழிய அழைப்பைப் பெற்ற ஊழியக்காரன் எனினும் நான் வேதாகமக் கல்லூரிக்குச் சென்று, ஆத்மீக அறிவைப் பெற்றுக் கொள்ள இருந்த போதும்,** அது சம்பந்தமாக சந்தர்ப்பத்தை எனக்கென்று ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் நான் எனக்குக் கிடைத்த எல்லா வேளைகளிலும் பரிசுத்த வேதாகமத்தில் இருக்கின்ற வசனங்களை வாசித்து **தேவனுடைய பாதத்தில் காத்திருந்து மீண்டுமாக தியானம் பண்ணுவதை வழக்கமாக்கிக் கொண்டேன்.** பல வேளைகளில் தனியாக இருக்கும் பொழுதெல்லாம் கண்ணீரோடு இயேசுவின் அன்பைக் குறித்து **தியானம் பண்ணுவேன்.** நான் தேவனோடு தனியாக இருக்கும் பொழுதெல்லாம் தேவன் **தேவ வசனத்திற்கூடாக ஆத்மீக காரியங்களைக் கற்றுத் தருவார்.** தற்போது எனது **30வருட** ஆத்மீக வாழ்வில் நான் எல்லா மனிதருக்கும் பிரயோஜனப்படுகின்ற பாத்திரமாக தேவன் என்னை மாற்றியுள்ளார். தேவன் உங்களுக்குள் வாசம் பண்ணுகின்ற வேளை உங்களுக்கு **தேவன் வல்லமையும், அறிவில் தெளிவும் பெறுவீர்கள்** தேவ ஆவியைப் பெற்ற **உங்களை அறிவில் சிறந்து விளங்கும்படியாக வாழ்வை ஆசீர்வாதங்களால் நிரப்புவாராக! வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உலக அறிவிற்கூடாக என் வாழ்வில் ஜெயம் பெற முடியாதென்பதை அறிந்துக் கொண்டேன். உங்கள் தேவ ஆவியானவருக்கூடாக அனைத்தையும் அறிந்துக் கொள்ள தெளிந்த அறிவையும் பெற்றுத் தாருங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்;..." (நீதிமொழிகள் 1:7 )

ஜீவ மன்னா
மார்ச் 18
புதன்

**ஆசீர்வாதங்களை சுவீகரித்துக் கொள்ள உங்கள் இருதயத்தை பரிசுத்தப்படுத்துங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம்
அதி: 25 – 26

**"மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும்."** (நீதிமொழிகள் 16:1)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் **வல்லமையான நாமத்தில் உண்மையுள்ளவர்களாய் நடந்து பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதனின் உள்ளத்தில் அனேக சிந்தனைகள் ஆரம்பமாகும். ஆனால் அவைகளில் நடைமுறைப்படுத்தப்படுவது எவ்வளவு? என நாங்கள் அறியோம். ஏனென்றால் மனித உள்ளத்தில் ஏற்படுகின்ற சிந்தனைகள் அனேகமாக செயலற்று போய்விடுகின்றன ஆனாலும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! தேவனானவர் எங்களை தம்மண்டை அழைத்த நாள் தொடங்கி தேவன் எங்கள் வாழ்க்கையின் உத்தரவாதத்தை பொறுப்பேற்றுக் கொண்டார். **எங்கள் வாழ்க்கை சம்பந்தமான எல்லா காரியங்களையும் தேவன் இப்போதும் திட்டமிட்டு முடித்து விட்டார்.** எங்கள் வாழ்வை உயர்த்தவும் தேவையான நன்மையான யோசனைகளை எங்களைக் குறித்து வைத்துள்ளார். ஆகையால் அவரது பிள்ளைகளான எங்களுக்கு **எங்கள் வாழ்க்கையைக் குறித்து எந்தவித பயமும் கொள்ள வேண்டியதில்லை. சங்கீதம் 138:8**இல் தாவீது ராஜா **"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் கர்த்தாவே உமது கிருபை என்றுமுள்ளது உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக"** என்று கூறியுள்ளார். நீங்களும் உங்கள் தேவன் பேரில் முழு விசுவாசத்தையும் வைத்து விசுவாசியுங்கள்.

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளத்தில் அநேக சிந்தனைகளை, உங்கள் யோசனைகளை, நடைமுறைப்படுத்த அவசரப்படாதீர்கள்.** உங்கள் யோசனைகளை, சிந்தனைகளை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து நீங்கள் அமைதியாயிருங்கள். **தேவனே எனது முழு வாழ்க்கையையும் உமக்கு அர்ப்பணித்துள்ளேன்.** உங்கள் நன்மையான திட்டங்களையும், உங்கள் சித்தம் என்ன என்பதை வெளிப்படுத்தி அவைகளை செயல்படுத்த எனக்கு உதவி செய்யுங்கள் என்று **ஜெபம் பண்ணுங்கள்.** உங்கள் ஜெப நேரத்தின் போது உங்கள் உள்ளத்தின் சிந்தனைகளை தேவனிடம் ஒப்படைத்து அவரின் பதிலை எதிர்பார்த்த வண்ணமாக காத்திருங்கள். உங்கள் எண்ணங்களை ஆலோசனைகளின் பின்னால் ஓட இடங்கொடாதீர்கள். **முழு உள்ளத்தையும் தேவனிடம் அர்ப்பணித்து ஜீவியுங்கள்.** மேலே **நீதிமொழிகள் 16:1**இல் கூறுவதாவது "மனதின் யோசனைகள் மனுஷனுடையது, நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் எப்போதும் உங்கள் உள்ளத்தை ஆயத்தப்படுத்தி தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உள்ளத்தை ஆயத்தப்படுத்த வேண்டியது எனது கடமை என்று அறிந்துக் கொண்டேன். உங்கள் பேரில் முழு விசுவாசத்தோடு என் உள்ளத்தை ஆயத்தப்படுத்திக் கொள்ளக் கிருபை செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில் . ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்."
(நீதிமொழிகள் 19:21)

## அதி மேன்மை பொருந்திய தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் அதி: 27 – 28

**"கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்."** (சங்கீதம் 48:1)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் **இப்புதிய தினமதிலே நிர்மூலமாகாத கர்த்தருடைய புதிய கிருபையைப் பெற்று மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** நீங்களும் நானும் உலகத்தில் வாழும் மனிதருக்கு எவ்வளவு உதவி செய்தாலும், துணையாக இருந்தாலும், அவை ஞாபகத்தில் இருப்பது மிகக் குறுகிய காலமே ஏனென்றால் மனிதன் இன்னொரு **மனிதனை மிகக் உயர்வாகக் கருதாமல் இருப்பதே காரணமாகும்.** ஆனாலும் உலகில் மனிதன் அப்படியாயினும் எமது தேவனாகிய கர்த்தர் கூறுவது **ஏசாயா 43:4**இல் **'நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம் பெற்றாய் என்றாகும்.'**

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** நீங்கள் ஆவிக்குரிய பிள்ளையானபடியால் மனிதர்கள் உங்கள் வாழ்வில் பாராமுகமுள்ளவர்களாக இருப்பினும் உங்கள் சிருஷ்டிப்பின் தேவர் முன்னிலையில் **நீங்கள் மிகவும் அருமையானவர்களாக இருப்பதாலும், தேவன் உங்களை அளவுக்கதிகமாக நேசிப்பதாலும் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்!** இப்பூமியில் வாழ்கின்ற எங்களைப் போன்ற மனிதர்கள் அல்ல, பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற மகிமையுள்ள கர்த்தர் **எங்களைக் குறித்து இவ்வளவாக கரிசனைக் காட்டுவது மிகவும் மேன்மையான–தொன்றாகும்.** அவைகளைச் சிந்தித்தே நாங்கள் தேவனை அதிகமாக ஸ்தோத்தரிக்க வேண்டும். ஏனென்றால் பூமியில் சாத்தானின் அதிகார வல்லமைக்கு கீழாக பலவித சரீர, மானசீகமான கட்டுகளில் சிறைப்பட்டிருந்த எங்களை இயேசுகிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத பரிசுத்த இரத்தத்தினால் மீட்டு சொந்த பிள்ளைகளாக வேறுபடுத்தி எங்களை விடுதலை பெறச் செய்தது தேவனே ஆவார்.

தேவ பிள்ளைகளே! உண்மையிலேயே தேவன் உன்னதமானவராவார். ஏனெனில் **சங்கீதம் 48:1**இல் எழுதியிருப்பது, **'கர்த்தர் பெரியவர் அவர் தமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்.'** என்றாகும். ஆகையால் இப்பூமியில் வாழ்கின்ற மிகவும் சிறிய மனிதர்களான நம்மை இப்படியாக சாத்தான் இருள் இராஜ்யத்தின் வல்லமையிலிருந்து மீட்டு, யாரும் சேரக்கூடாத ஒளியின் இராஜ்யத்திற்குள் அழைத்து சேர்த்துக் கொண்டது தேவன் மகா மேன்மையானவர் என்பதால் அல்லவா? ஆகையால் **நீங்களும், நாமும் எங்களை அழைத்த உன்னத பிதாவானவரை குறித்து நினைத்து மேன்மை பாராட்டி அவருக்கு பிரியமுள்ளவர்களாகவும், அவரின் விருப்பத்தின்படியும் வாழ்வோம்.** அப்பொழுது நாம் நன்றியுள்ளம் கொண்டவர்கள் என்பதனை மேன்மையாக எண்ணி எம்மை ஆசீர்வதிப்பார். **இன்று ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் பெரியவர் சாத்தானது வல்லமையில் என்னை மீட்டெடுத்து, எனது வாழ்க்கைக்கு ஆசீர்வாதம் அளித்தது நீங்களாகும். அதை நீங்கள் நினைத்து உங்களுக்கு எப்போதும் ஸ்தோத்தரிக்க உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே." (சங்கீதம் 96:4)

ஜீவ மன்னா
மார்ச் 20
வெள்ளி

**என்னுடைய சம்பத்து என நம்மை உரிமையாக்கிக் கொண்ட கர்த்தர் !**

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் அதி: 29 - 30

**"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்;..."** (மல்கியா 3:17)

இருந்தவரும், இருக்கிறவரும் வருகிறவருமாகிய ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் ஜீவ மன்னா வாசகர்கள் அனைவரையும் இக்காலைப் பொழுதில் வாழ்த்துகிறேன்.** சிருஷ்டிப்பின் பரலோக தேவனைக் குறித்து அறிந்துக் கொண்ட **நீங்களும், நாமும் மிகுந்த ஆசீர்வாதம் பெற்ற பிள்ளைகளாவோம்.** மனிதன் இன்னுமொரு மனிதனை முற்றிலுமாக சார்ந்திருக்கலாம். அப்படியே மனிதன் இன்னுமொரு மனிதன் பேரில் வைராக்கியங் கொண்டு எதிர்த்து நிற்க முடியும். அது எப்படியாயினும் பரலோக தேவன் அவரது பிள்ளைகளுக்குக் கூறுவது **நீ எனது சம்பத்து ஆவாய் என்றாகும்.**

தேவ பிள்ளைகளே! மேற்குறிப்பிட்ட **மல்கியா 3:17**இல் எழுதப்பட்டுள்ளது **'என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளில் அவர்கள் என்னுடையவர்களாயி-ருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்'** என்றாகும். பரிசுத்தரும், உன்னதமானவரும், பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற எங்கள் தேவனுக்கு முன்னால் நாம் எம்மாத்திரம்? என்று **நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள்.** ஒரு மனிதனுக்கு உதவி செய்வோமானால் அம்மனிதன் எங்களை மிகவும் நேசித்து எங்கள் மேல் மிகவும் பிரியமாயிருப்பான். ஆனாலும் ஒரு சிறு குறைபாடு, தவறு ஏற்படுமாயின் ஒரு நிமிடத்தில் அனைத்தையும் மறந்து எங்களோடு கோபமாகி விடுவான். ஆனாலும் **உள்ளம் கலங்காதீர்கள்.** மனிதர் உங்களுக்கு எதிராக துரோகம் செய்தாலும் **நீங்கள் கலக்கமடையாதீர்கள் உங்கள் உள்ளத்தில் வேதனைகள் துக்கங்களை உண்டாக்கிக் கொள்ளாதீர்கள்.**

தேவ பிள்ளகைளே! உலக மனிதர்கள் அவர்களது சம்பத்து என்று கூறுவது **அவர்கள் வசமிருக்கும் பணம், இடம், நிலம், தங்க ஆபரணங்கள் ஆகியவைகளாகும்.** இவைகளைப் பெற்றுக் கொள்ள அல்லது இவைகளை தமக்கு சேர்த்துக் கொள்ள மனிதர்கள் அதிகமாக பாடுபடுகிறார்கள். அவர்களது சம்பத்துக்களை காத்துக் கொள்ள தம்மால் முடிந்த அளவில் செயல்படுவார்கள். ஏனெனில் அவைகளோடு மிகவும் சார்ந்துக் கொள்வார்கள். அப்படியானால் நீங்கள் எனது சம்பத் ஆவீர்கள் என்று கூறிய தேவனின் சம்பத் ஆகும். **எங்களை எவ்வளவாக பாதுகாப்பார்?** தேவன் எங்களுக்கு மேல் **எவ்வளவு அன்பு கொண்டுள்ளார்?** எங்களைக் குறித்து எவ்வளவாகக் **கரிசனைக் கொண்டுள்ளார்?** என்று சிந்தித்துப் பாருங்கள். **தேவ பிதாவானவரைக் குறித்து அறிந்துக் கொண்ட நீங்கள் அருமையானவரல்லவா? வெற்றிகரமான நான்!**

ஜெபம்

என் தேவனே! இஸ்ரவேல் ஜனங்கள் உமது சொந்த சம்பத்து என உரிமையாக்கிக் கொண்டது போல என்னையும் உங்கள் பிள்ளையாக உங்கள் சம்பத்தாக உலகில் வேறுபடுத்திக் கொண்டமையால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்." (சங்கீதம் 135:4)

ஜீவ மன்னா
மார்ச் 21
சனி

## உங்களுக்கு தேவன் கூறிய வசனங்கள் நிறைவேறும் வரை காத்திருங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம்
அதி: 31 – 32

**"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்."** (எரேமியா 33:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாள் நன்மையால் நிறைவு பெறும் நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** இப்பூமியில் வாழ்கின்ற எமது வாழ்வு நிலையற்றதென்று நாமறிவோம். உதாரணமாகக் கூறுவோமானால் சிறு பிள்ளைகள் விளையாடுவதற்காக தண்ணீரில் சவர்க்காரத்தைக் கரைத்து சிறு குழாய் போன்ற உபகரணத்தில் நுரை வெளியில் வரும்படியாக வாயில் ஊதி விளையாடுவதை அவதானிப்பீர்கள். அவர்கள் வாயில் ஊதும்போது குழாய் வழியில் வருகின்ற அழகான நுரையை கையில் பிடிக்கின்ற வேளை அழிந்து இல்லாமல் போய் விடுவதைப் போன்று எங்களுடைய வாழ்க்கையும் **ஒரு நொடிப்பொழுதில் அழிந்து போகலாம். ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! எங்கள் இயேசுகிறிஸ்து எங்களைக் குறித்து கூறியுள்ள அனைத்து வசனங்களும் நன்மையானவைகளாவதோடு. நன்மையையே வாய்க்கப்பண்ணும் என்பதை அறிவீர்களா? இன்றைய நாளில் பிரதான வேதாகம வசனத்தில் தேவன் உங்களுக்குக் கூறுவதாவது உங்களைக் குறித்துச் சொன்ன நல் வார்த்தையை நிறைவேற்றுகின்ற நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அது ஒரு நாளிலோ, இரண்டு நாளிலோ அல்லது பல நாட்களில் நிறைவேறுமென்று குறிப்பிடவில்லை. ஏனென்றால் **தேவனது நாட்கள் வரும் போது அவைகள் நிறைவேறுமென்று தேவ வசனத்தில் குறிப்பிட்டுள்ளது. என்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சுமார் 18 வருடக்காலமாக எனது தாய் சபையில் தேவ சேவையாற்றினேன்.** அந்த காலத்துக்குள் எனது தேவனின் அழைப்பென்று நினைத்து எனக்கு வந்த **அனைத்து உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்து தேவ ஊழியத்தைச் செய்தேன்.**

தேவ பிள்ளைகளே! அந்த காலத்துக்குள் தேவன் வசனத்திற்கூடாக எனது வாழ்க்கையில் நன்மையான பல காரியங்களைக் குறித்து பேசினார். நான் தேவன் கூறிய சகல காரியங்களும் **ஒரு நாள் நிறைவேறும் என்று விசுவாசத்தோடு காத்திருந்தேன்.** அப்படியே **18 வருடத்திற்கு பின்னர் தனியாக தேவ ஊழியம் செய்யும்படியாக புதியதொரு பாதையைத் திறந்து கொடுத்தார்.** என்னை மாத்திரமன்றி உங்களையும் குறித்து தேவன் நன்மையான திட்டங்களை வைத்திருப்பதினாலும், அவைகளை வசனத்திற்கூடாக வெளிப்படுத்துவார் என்பதால் பொறுமையோடு அவரை நோக்கிக் காத்திருங்கள். உங்களின் நாள் அல்ல அவரின் நாள் வரும் போது **சகலவற்றையும் நிறைவேற்றுவார். வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் இஸ்ரவேல் வம்சத்தைக் குறித்தும் யூதா வம்சத்தைக் குறித்தும் கூறிய அனைத்து நன்மையான வசனங்களும் நிறைவேற நாள் வந்தது போல எனது வாழ்விலும் உங்கள் நன்மையான வசனங்கள் நிறைவேறும் என விசுவாசிக்கிறேன். நீர் என்னை ஆசீர்வதியுங்கள். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது."
(சங்கீதம் 33:4)

## நீங்கள் தேவனைத் தேடினீர்களெனின் வாழ்வில் வெற்றி பெறுவீர்கள் !



**"...அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்."** (2 நாளாகமம் 26:5 )

அருமையான தேவ ஜனங்களே! எண்ணிலடங்காத நன்மைகள் நமக்குச் செய்த ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைய நாளில் அனைத்திலும் வெற்றி பெறும்படியாக வாழ்த்துகின்றேன்.** உங்கள் குடும்பத்தில் அநேக அங்கத்தவர்களிலிருப்பினும் உங்களுக்கு உற்றார், உறவினர், நண்பர்கள் இருப்பினும், நெருங்கிய உறவில்லாது, அன்பில்லாது உங்களைத் தேடாதிருக்கலாம். நீங்கள் அப்படியான நிலையில் இருப்பவரெனின் **எனக்கு ஒருவருமில்லை என துயரப்படாதீர்கள்.** ஏனென்றால் உங்களை உருவாக்கிய தேவனைக் குறித்து அறிந்திருப்பதனாலும் அவர் உங்களை விலைமதிக்க முடியாத சம்பத்து என பாதுகாத்து **உங்களின் அனைத்து காரியங்களையும் கரிசனையோடு செய்து முடிப்பார்.**

தேவ பிள்ளைகளே! முதன் முதலாக நீங்களும், நானும் தேவனைத் தேடி போகவில்லை, ஆனாலும் உலகில் பாவத்தில் மூழ்கிக் கிடந்த **உங்களையும், என்னையும் தேடி வந்த தேவமைந்தனைக் குறித்து நாங்கள் அறிந்துக் கொள்ளும்படியாகச் செய்தது தேவன் அல்லவா?** எங்கள் பேரில் மனிதர்களைப் பார்க்கிலும் அளவற்ற அன்பு கொண்டிருக்கிற தேவன் எவ்வளவாக பராமரிக்கின்றார் என சிந்தித்துப் பாருங்கள். மேற்கூறிய பிரதான தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளதாவது. தேவ வசனத்தில் யூதாவின் இராஜாவாக **உசியாவை அமத்சியாவின் ஸ்தானத்திலே இராஜாவாக்கினார்கள். அவன் 52 வருடங்கள் அரசாண்டான் என்றும் அத்தோடு கர்த்தரின் பார்வைக்கு தனது தகப்பனைப் போன்று செம்மையானவைகளைச் செய்தான் என்றும்** அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார் என்றுமாகும். உசியா இராஜாவின் கீர்த்தி எகிப்தின் எல்லைமட்டும் எட்டினது. **அவன் மிகவும் பெலங் கொண்டான்.**

தேவ பிள்ளைகளே! உசியாவின் தேவன் இன்றும் ஜீவிக்கின்றார். நீங்களும் தேவனைத் தேடுவீர்களாயின் உங்கள் வாழ்வும் செழிப்புற்று எல்லா வழிகளும் வளம் பெற்றிருக்கும். ஆனாலும் அநேக சந்தர்ப்பங்களில் **நாங்கள் சோம்பேறியாக ஜெபம் செய்யாமல் தேவ வசனம் வாசிக்காது நாட்களை வீணாக கழிக்கின்றோம்.** ஆனாலும் நமது தேவன் தேவ மைந்தனாக எங்களைத் தேடி வந்து எங்களைக் கிட்டிச் சேர வருகின்ற வேளையில் நாம் அவரைத் தேடாது **மனிதர்கள் எமக்கு உதவி செய்கிறார்கள் இல்லையெனக் கவலைப்படுவது பயனற்றதாகும்.** எங்களை மிகவும் நேசிக்கின்ற, எங்களுக்கான தேவைகள் அனைத்தையும் வாய்க்கப்பண்ண, எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் **தேவனை எல்லா வேளையிலும் தேடி உங்கள் வாழ்வை வளமுள்ளதாக்கிக் கொள்ளுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உசியா என்னும் ராஜா உங்களைத் தேடி வெற்றியைப் பெற்றுக் கொண்டது போல அவரைப் போல நானும் உங்களை முழு உள்ளத்துடன் தேட கிருபை செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு." (நீதிமொழிகள் 8:18)

ஜீவ மன்னா

மார்ச் 23

திங்கள்

மனிதனுடைய
வீண் வார்த்தைகளுக்கு
பயப்படாதீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம்
அதி: 35 – 36

**"அப்பொழுது ஏசாயா அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்."** (ஏசாயா 37:6)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் நிர்மூலமாகாத புதிய கிருபையால் நிறைந்த **இன்றைய நாளைப் பெற்றமையால் உங்களை வாழ்த்துகின்றேன்.** பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் அதிபதியாக ஆளுகை செய்கின்ற சகல தேவன் மூலமாக தேவனின் சொந்த அபிப்பிராயத்தின்படி உங்களைத் தேர்ந்தெடுத்து தேவனின் பிள்ளையாக்கிக் கொண்டமையால் **உங்களைப் போன்ற அதிர்ஷ்டசாலியான இன்னுமொருவர் இவ்வுலகில் இல்லையென நான்** உங்களுக்குக் கூறுகின்றேன். ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவனின் சொந்த பிள்ளையாகையால் **தேவனை முழு உள்ளத்தோடு விசுவாசித்து அவரது வசனங்களைக் கைக் கொண்டு வாழ வேண்டியது அவசியமாகும்.** எப்போதும் உங்கள் மனசாட்சி உங்களை குற்றவாளி என இடறாதபடி பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும். அப்படியாக நீங்கள் பரிசுத்தராக வாழ்கின்ற வேளையில் எப்போதும் **உங்கள் சிருஷ்டிப்பின் தேவன் உங்களோடு இருப்பாராக!** ஆனாலும் சில வேளைகளில் நீங்கள் பரிசுத்தமாக வாழ்ந்தாலும் மனிதர்கள் உங்களுக்கு பலவிதமான வீண் பழிகளைச் சுமத்தி நீங்கள் செய்யாத ஏதாவது பிழைகள் பாவங்கள் நீங்கள் செய்தீர்கள் என்று கூறி ; உங்கள் ஆத்மீக வாழ்க்கை **நீங்கள் செய்கின்ற ஊழியம் உங்களுக்கு வேண்டாமென்ற எண்ணத்தை ஏற்படுத்தி உங்களை தேவனிடமிருந்து மிக தூரமாக்க கிரியை செய்யலாம்.** மேலே கூறிய **ஏசாயா 37:6**இல் அப்படியான ஒரு நிகழ்வைக் குறித்தே எழுதப்பட்டுள்ளது. **'அசீரிய இராஜாவாகிய செனகரிப் யூதாவின் இராஜாவாகிய எசேக்கியாவிடம் தனது சேவகர்களை அனுப்பி இஸ்ரவேல் தேவனை நிந்தித்து எசேக்கியாவை இகழ்ந்து பேசியதை ஏசாயா 36:1,22'** வரையிலான வசனங்களில் காண்கிறோம்.

தேவ பிள்ளைகளே! அப்பொழுது எசேக்கியா இராஜா தேவ மாளிகையில் பிரவேசித்து **தேவன் முன்னிலையில் ஜெபம் பண்ணினார்.** தேவன் ஏசாயா தீர்க்கதரிசியிடம் எசேக்கியா இராஜாவிடம் கூறியதாவது, அசீரியா இராஜாவின் ஊழிக்காரர் **என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும் என்றாகும்.** நீங்களும் இன்று இந்த வார்த்தையை உள்ளத்தில் பதித்து வைத்துக் கொள்ளுங்கள். மனிதன் உங்களை இகழ்ந்து, நிந்தித்து, **வீண்பழி சுமத்தும் காரியங்களுக்கு பயப்படாது அனைத்தையும் நீடிய பொறுமையுடன் சகித்து முன்னோக்கி பயணியுங்கள் தேவன் இன்று உங்களோடிருக்கிறார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! எசேக்கியாவின் தேவனான நீங்கள் இன்றும் என்னோடிருப்பதால் ஸ்தோத்திரம்! மனிதர்களது வாய் வார்த்தைகளுக்கு பயப்படாது வாழ என்னை பெலப்படுத்துங்கள்.
இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்." (ரோமர் 8:33)

ஜீவ மன்னா

மார்ச் 24 செவ்வாய்

## உங்கள் குற்றமற்ற பரிசுத்த வாழ்வை உயர்வெனக் கூறும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

உபாகமம் அதி: 01 - 02

**"...அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்."** (தானியேல் 6:22)

அருமையான தேவ பிள்ளைகளே! நித்தியமான கிருபையிலே இன்றைய நாள் முழுவதுமாக வழி நடத்தப் போகும் **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.** உலகில் மனிதனைப் படைத்த அவனுக்கு உபகாரம் செய்கின்ற, ஆதரவற்ற நிலையில் ***அவனுக்குத் துணை புரிகின்ற ஜீவிக்கின்ற தேவனொருவர் உலகில் இருப்பதை நீங்கள் அறிவீர்களா?*** ஆனாலும் இவ்வுலகில் மனிதர்கள் பெரும்பாலும் வஞ்சனையான காரியங்களில் இணைந்து செயல்படுவதனாலும், அநாதரவான, குற்றமற்ற நல் மனிதர்க்கு உபத்திரங்கள், இடையூறுகள் செய்வதனாலும், வஞ்சனையான மனிதர்களுக்கு அவர்களது கிரியைகளுக்கு ஏற்ற தண்டனை கிடையாதபடியினாலும் **உண்மையான தெய்வம் உலகில் இருக்கின்றாரா? என மனிதர்கள் சிந்திக்கின்றார்கள்.**

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் கூறியுள்ளபடி தானியேல் தேவனின் தாசன் என்பதோடு பாபிலோனிய **தரியு இராஜாவின் பிரதானிகளுக்கும், தேசாதிபதிகளுக்கும் மேல் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்.** அப்பொழுது பிரதானிகளும், தேசாதிபதிகளும் **தானியேலைக் குற்றப்படுத்தி ராஜாவின் கட்டளையின்படி சிங்கக் குகையில் போடுவதற்கு திட்டமிட்டார்கள்.** ஆனாலும் தானியேலை சிங்கக் குகையில் போட்டாலும் எந்தவித ஆபத்தும் அவனுக்கு ஏற்படவில்லை. ஏனென்றால் ராஜா கட்டளையிட்ட எந்தவிதத்திலும் கட்டளையும் மாற்றப்படக் கூடாதிருந்தபடியால் இராஜா சிங்கக் குகையில் தானியேலைப் போட்ட மறுதினம் காலமே கிழக்கு வெளுக்கும் போது ராஜா எழுந்திருந்து சிங்கக் கெபிக்குத் தீவிரமாய் போய் துயரசத்தமாய் தானியேலைக் கூப்பிட்ட போது **தானியேல் சிங்கக் குகையிலிருந்து இராஜாவுக்கு பதில் கொடுத்து தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார் என்றும் தான் காப்பாற்றப்பட்டதையும் இராஜாவுக்கு அறிவித்தான்.**

தேவ பிள்ளைகளே! தானியேல் இராஜாவுக்குக் கூறியது தேவன் அவனைக் காப்பாற்றியது **அவன் தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றவனாக காணப்பட்டதனால் என்றாகும்.** இன்னுமாக இராஜா முன்னிலையில் அவன் ஒரு குற்றமும் செய்யவில்லையெனக் கூறினான். ஆத்மீக பிள்ளைகளான எங்களுக்கு **உலகில் உபத்திரவம், பிரச்சினைகள், சவால்களுக்கு முகங் கொடுக்க முடியும்.** நாங்களும் இந்த தானியேலைப் போன்று தேவன் முன்னிலையில் குற்றமில்லாது பரிசுத்தமாக வாழ்வோமானால் தேவன் **எங்கள் பட்சத்திலிருந்து எம்மைக் காத்திடுவார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! தானியேலின் குற்றமற்ற பரிசுத்த வாழ்க்கையை மேலாக எண்ணி சிங்கத்திடமிருந்து அவனை காத்துக் கொண்டீர்கள். நானும் அவ்வண்ணமே உங்கள் முன்னிலையில் மனிதன் முன்னிலையில் குற்றமற்ற பரிசுத்தம்மிக்கவராக வாழ உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"துன்மார்க்கன் தன் தீமையிலே வாரிக்கொள்ளப்படுவான்; நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்." (நீதிமொழிகள் 14:32)

ஜீவ மன்னா

மார்ச் 25

புதன்

# தேவன் கொடுத்த சமாதானத்தைக் காத்துக் கொள்ளுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

உபாகமம்

அதி: 03 – 04

**"அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்; அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?"** (யோபு 9:4)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நல்லதொரு நாளைப் பெற்று மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து யோசனையில் பெரியவர். கிரியைகளிலே வல்லவர் ஆவார். **கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை.** என **நீதிமொழிகள் 21:30**இல் காண்கிறோம். ஆகையால் தேவனது கிரியைகள், திட்டங்கள், யோசனைகள் ஆகியவற்றிற்கு விரோதமாக நின்று அவைகளைத் தடை செய்ய யாராலும் முடியாது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் அறிந்துக் கொண்டபடியால் உங்கள் வாழ்க்கையைக் குறித்து **நீங்கள் பலவிதமான திட்டங்களை வகுத்து அவைகளை நிறைவேற்ற முற்படாதீர்கள்.** ஏனென்றால் உங்கள் வாழ்க்கையை தேவனின் கரங்களுக்கு ஒப்புக் கொடுத்த பின்னர் தேவன் நன்மையான திட்டங்களோடு உங்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னோக்கிக் கொண்டுச் செல்வாராக, ஆனாலும் **உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து பின்னரும் உங்கள் திட்டங்களின்படியும், விருப்பத்தைப் போலவும், செயல்பட நீங்கள் முயற்சி செய்தீர்களாயின் உங்களுக்கும், தேவனுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுகிறது.** ஏனெனில் நீங்கள் தேவனின் யோசனைகள், திட்டங்கள் என்பவற்றிற்கு விரோதமாகச் செயல்படும் எல்லா வேளையிலும், **நீங்கள் தேவன் முன்னிலையில் கீழ்படியாமை எனும் பாவத்திற்குட்படுகிறீர்கள்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் பெற்றோர் தங்கள் பிள்ளை கீழ்படியாத போது **எம்மைத் தண்டித்து சரியான பாதையில் நடக்கச் செய்கிறார்கள்.** எங்கள் தேவனுக்கு நாங்கள் கீழ்படியாத போது அதில் எமக்கு நன்மையானது நிகழுமா? என்று நீங்கள் நினைத்துப் பாருங்கள். **யோபு 9:4**இல் எழுதப்பட்டுள்ள வசனம் **'அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர் பெலத்தில் பராக்கிரமுள்ளவர். அவருக்கு விரோதமாக தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?'** என்று கூறுகிறது. தேவன் சமாதானத்தின் தேவன் என்பதால் அவரது சமாதானம் உங்களுக்கும் இருக்கிறது. ஆனால் உங்கள் உள்ளத்தில் ஏற்பட்ட ஆசைகள், ஆவல் என்பனவற்றை நிறைவேற்றிக் கொள்ள **தேவனுடைய திட்டங்களுக்கு, செயல்களுக்கு விரோதமாக செயல்படும் போது தேவனுடைய சமாதானத்தை இழந்து விடுகிறீர்கள். உங்கள் உள்ளத்தைக் கருங்கல் ஆக்காது சமாதானத்தை காத்துக் கொள்ளுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் சமாதானத்தின் தேவனைப் போன்றே நீங்கள் என்னுடைய தேவனாகையால் உங்களுக்குக் கீழ்படிந்து எனக்கு நீங்கள் கொடுத்த சமாதானத்தைக் காத்துக் கொள்ள என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்." (நீதிமொழிகள் 28:14)

| | | |
|---|---|---|
| ஜீவ மன்னா<br>மார்ச் 26<br>வியாழன் | ஆத்மீக வாழ்வில் பின்வாங்கி உங்கள் ஜீவனை இழந்து விடாதீர்கள் ! | இன்றைய வேதவாசிப்பு<br>உபாகமம்<br>அதி: 05 - 06 |

**"நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்."** (எபிரேயர் 10:39)

அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! சர்வ வல்லமையுள்ளவராகிய **இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமம் இன்றைய நாளில் புதிய பெலனைக் கொடுத்து வழிநடத்துமாறு வாழ்த்துகின்றேன்.** சிருஷ்டிகரான எமது தேவ பிதாவின் சொந்த மகன் மூலமாக எம்மைத் தமது சொந்த ஜனங்களாக வேறு பிரித்துக் கொண்டது எம்மை அழிவினின்று பாதுகாத்துக் கொள்வதற்கேயாகும். எங்கள் வாழ்க்கையில் காணப்பட்ட பாவங்கள் காரணமாக **எமக்கு மரணமே நியாயத்தீர்ப்பாயிற்று. ஆனாலும் தேவ குமாரரானகிய நம் இயேசுகிறிஸ்து எம்மை மீட்டு எமது வாழ்வை அழிவினின்று காத்துக் கொண்டார். ஆகையால் நீங்கள் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து **பரி.யோவான் 10:10**இல் எங்களுக்குக் கூறியுள்ளதாவது, **'திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.'** நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றாகும். அதில் இயேசுகிறிஸ்து மனுவுரு எடுத்து தேவ குமாரன் வடிவில் உலகிற்கு வந்தது எங்கள் வாழ்வை அழிவினின்று காப்பாற்றி எங்களுக்கு புதிய ஜீவனைக் கொடுக்கவே என்பது தெளிவாகின்றது. **இயேசுவை ஏற்றுக் கொண்ட நாஉம், நீங்களும் எவ்வளவு அதிர்ஷ்டக்காரர்கள்?** என நினைத்துப் பாருங்கள். மேலே கூறப்பட்ட **எபிரேயர் 10:39**இல் இன்றைய நாளில் எங்களுக்கு சொல்கிறதாவது, **'நாமோ கெட்டுப் போகப் பின் வாங்குகிறவர்களாயிருக்கிறோம்'** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! ஆகையால் **ஆத்மீக வாழ்வில் முகங் கொடுக்க நேரிடுகிற பலவிதமான பிரச்சினை, இடையூறுகள், சவால்கள் காரணமாக அதைரியப்பட்டு இன்னுமாக இந்த ஆத்மீக வாழ்வில் முன்னோக்கிச் செல்ல எனக்கு முடியாது என்று இயேசுகிறிஸ்துவிடமிருந்து நீங்கள் தூரமாகச் செல்ல முற்படாதீர்கள்.** ஏனென்றால் உங்கள் பிராணனை அழிவினின்று காப்பாற்றியது நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபடியினால் அல்லவா? இப்பொழுது நீங்கள் மீண்டுமாக பின் வாங்குபவர்களாக இருந்தால் அவரது பாதுகாப்பு உங்களுக்குக் கிடையாது. **ஆகையால் ஆத்மீக பிள்ளையெனினும் ஏன் எனக்கு இவ்வளவு உபத்திரவங்கள்?** என்று கூறி நீங்கள் முறுமுறுக்காதீர்கள். அழிவினின்று உங்களை மீட்ட **இயேசுகிறிஸ்து இன்றும் உங்களோடிருக்கிறார். வெற்றிச் சிறந்த நந்நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் மகனை உலகிற்கு அனுப்பி என்னுடைய வாழ்வை அழிவினின்று காத்துக் கொண்டார். ஆகையால் இயேசுகிறிஸ்துவை விட்டு தூரமாகி மீண்டுமாக வாழ்க்கையை அழிவுக்குள்ளாகாதபடி எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். -ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்."(2 பேதுரு 2:20)

ஜீவ மன்னா
மார்ச் 27
வெள்ளி

## உங்கள் நல் யோசனைகள் தேவனால் உறுதிப்படுத்தப்படும் !

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம்
அதி: 07 - 08

**"உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்."** (நீதிமொழிகள் 16:3)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் நினைவுகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்களிடம் எந்தவிதமான பிரதிபலனும் அன்பு இருதயத்தோடு **எங்களுக்கு உறுதுணை புரிகின்ற, ஒத்தாசை செய்கின்ற, தேவனாகிய கர்த்தரைக் குறித்து அறிந்துக் கொண்ட நீங்கள் மிகவும் ஆசீர்வாதம் பெற்றவர்கள் ஆவீர்கள்.** ஏனெனில் மனிதனானவன் அவனைப் போன்ற மனிதனுக்கு உதவி செய்யவும், துணை புரியவும் முன் செல்வது அவனுக்கு ஒரு நாளைக்கு அவனிடமிருந்து உதவி பெற்றுக் கொள்ள முடியும் என்று **உள்ளத்தில் எண்ணங் கொள்வதே காரணமாகலாம்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனாகிய கர்த்தர் **'எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானது போல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்கிறதுமில்லை' என்று அப்போஸ்தலர் நடபடி 17:25**இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உலக மனிதர் தத்தமது உள்ளத்தில் ஏற்படும் நினைவுகளின்படி செயல்படுவார்கள். ஆனாலும் அவர்களது இருதயத்தின் நினைவுகள் எவ்வளவாக நிறைவேறும் என்பதை அறியோம். ஏனென்றால் ஒரு மனிதன் அவனது இருதயத்தின் நினைவுகளின்படி செயல்படும் போது அது நிறைவேறுவதில்லை அப்பொழுது அவன் மனிதனது உள்ளம் உடைந்து ஐயோ நான் என்ன செய்தாலும் அது தோல்வியடைகின்றதே என நினைத்து பின் வாங்கிப் போவான். ஆனாலும் அவனது எண்ணம் நிறைவேறும் போது **அவன் ஆனந்த களிப்புறும் போது இருதயம் இன்னும் மேலாக தைரியமடையும்.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் மனித வாழ்க்கைக்கு விரோதமாக கிரியை செய்கின்ற சாத்தான் மனிதனது உள்ளத்தை **சகலவித துர்ச்செய்கைகளுக்கு ஈடுபடுத்த முனைகிறான். அவனது வாழ்வை அழிக்கிறான்.** உதாரணமாக உங்களுக்குக் கூறுகின்றேன் பொருளாதார பற்றாக் குறைவு காரணமாக அவைகளில் மீட்படைய வெளிநாடுகளுக்குச் செல்ல உள்ளத்தில் நினைவுகளை எழுப்பி வெளிநாட்டு வேலைகளுக்கு மனிதர்களைக் கொண்டு சென்று பலவிதமான ஆபத்துக்களை உண்டு பண்ணுவிக்கிறான். ஆகையால் **நீங்கள் அவசர தீர்மானங்களை எடுக்காது எல்லா செயல்களையும் நீதிமொழிகள் 16:3**இல் **'உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி. அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும். எழுதியுள்ளவாறு உங்கள் நல் யோசனைகளை தேவன் உறுதிப்படுத்துவார்.' வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நல்லவர்! எனது அனைத்து செய்கைகளும் உங்களுக்கு ஒப்புவிக்கின்றேன். எனது வாழ்வின் நன்மையான யோசனைகளை ஸ்திரப்படுத்தி என்னை ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்." (சங்கீதம் 33:9)

ஜீவ மன்னா

மார்ச் 28

சனி

## சாத்தானை மேற்கொள்ளும் வல்லமை உங்கள் நாவில் உண்டு !

இன்றைய வேதவாசிப்பு

உபாகமம் அதி: 09 - 10

**“பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.”** (சங்கீதம் 8:2)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களின் துக்கங்கள் அகன்ற சந்தோஷமான நல் நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவன் நமக்கு எந்நேரமும் வெற்றியைப் பெற்றுத் தரும் தேவனாவார். ஏனெனில் தேவ வசனத்தில் கூறுவதாவது இயேசுவுக்குள் எப்போதும் **‘நம்மை வெற்றி சிறக்கப் பண்ணச் செய்யும் தேவன்’** என்பதை **2 கொரிந்தியர் 2:14**இல் காண்கிறோம் ஆகையால் **உள்ளம் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! மேல் கூறப்பட்ட பிரதான வேதாகம வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது, **பகைஞனையும், பழிக்காரனையும் அடக்கிப் போட தேவரீர உம்முடைய சத்துருக்களினிமித்தம் பாலகர் நாவினால் பெலன் உண்டு பண்ணினீர.** அதன் விளக்கம் என்னவெனில் நீங்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நாள் தொடங்கி உங்கள் வாயில் பெலன் உண்டு என்பதையாகும். ஆனாலும் அப்படியாவது எப்படி? என உங்களுக்கொரு எண்ணம் தோன்றலாம். தேவன் எங்களுக்கு வாக்குக் கொடுத்துள்ளதன்படி இயேசுகிறிஸ்து தேவனின் குமாரன் என்றும் **மனிதனது பாவத்திற்கு கூலி கொடுக்கும்படியாக அவர் சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக் கொடுத்தார் என்பதை ஏற்றுக் கொள்ளும் அனைவர் உள்ளத்திலும் தேவன் வாசம் பண்ணுகிறார். எப்படியெனின் வெளிப்படுத்தல் 3:20இல் எழுதியுள்ளதன்படி ‘இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்’** என்று எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஆத்மீகத்தில் மரணியாத தேவ பிள்ளையாவதற்கு முடியும். நீங்கள் இன்னும் சரியான அத்மீக அறிவைப் பெறாத ஆத்மீக பாலகன் ஆகலாம். நீங்கள் இன்னும் நிறையுள்ள ஆத்மீக உணவு உண்ணாத ஆத்மீகத்தில் சம்பூரண நிறைவை அடையாத போதிலும் **இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியால் தேவன் உங்களுக்குள் தேவ ஆவியானவராக வாசம் பண்ணுகின்றார்.** ஆகையால் தேவனின் நாமத்தில் நீங்கள் ஒரு காரியத்தை வாயினால் வெளிப்படுத்தும் போது உங்கள் வசனம் வல்லமையாக கிரியை செய்கின்றது. ஏனென்றால் தேவன் எங்களுக்குள் வாசம் பண்ணுகிறபடியால் தேவனின் வல்லமை எங்களுக்குள் இருக்கின்றது. **சாத்தான் மனிதன் மூலமாக பல விரோதமான காரியங்களைச் செய்யலாம்.** ஆனாலும் **நீங்கள் பயப்படாதீர்கள் நீங்கள் இயேசுவின் நாமத்தை உச்சரித்து ஜெபம் பண்ணுங்கள் சாத்தான் நிர்மூலப்பட உங்கள் நாவில் சாத்தானை மேற்கொள்ளும் வல்லமை இருப்பதனால் சாத்தானால் எதிர்த்து நிற்க முடியாது. ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் தேவ ஆவியானவர் எனக்குள் வாசம் பண்ணுவதால் ஸ்தோத்திரம்! என் நாவில் உங்கள் வல்லமையை வைத்து சாத்தானை ஜெயம் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;” (மாற்கு 16:17)

ஜீவ மன்னா

மார்ச் 29

ஞாயிறு

# பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் !

இன்றைய வேதவாசிப்பு

உபாகமம்

அதி: 11 – 12

**"பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார்."** (சங்கீதம் 5:6)

தேவ பிள்ளைகளே! அளவற்ற தேவ அன்பினால் **இயேசுவை கிட்டிச் சேர்ந்து வாழும்படியாக மகிழ்ச்சிகரமான இந்நாளில் வாழ்த்துகின்றேன்.** எங்கள் ஜீவிக்கின்ற தேவன் சத்திய வடிவானவர். அப்படியாயின் **அவர் ஒரு போதும் பொய்யுரையாதவர்.** தேவ வசனத்தில் கூறுவதாவது, **'பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ அவர் வசனித்தும் நிறை வேற்றாதிருப்பாரோ?' என்றாகும். ( எண்ணாகமம் 23:19 ).**

தேவ பிள்ளைகளே! ஆத்மீக தேவ பிள்ளைகளான நாங்களும் எங்கள் வாழ்வில் ஆத்மீக வளர்ச்சியை வெற்றியை பெற்றுக் கொள்ள எங்கள் சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவர் முன்னிலையில் **தேவனுக்கு உகந்த, பிரியமுள்ள வாழ்வை வாழ வேண்டும்.** எங்கள் இரட்சகரான தேவ மகனான இயேசுகிறிஸ்து **பரி.யோவான் 17:17,18**இல் கூறியிருப்பதாவது **'உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்'** என்றாகும். ஆகவே பிதாவைப் போன்று தேவனின் பிள்ளைகளான நாங்களும் உண்மையை மாத்திரம் பேச வேண்டும். பொய் சொல்வதற்கு அவசியமில்லை. ஆத்மீக பிள்ளைகள் பொய் சொல்லுகிறவர்களாயின் நாங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களல்ல **தேவ வசனத்தில் எங்கள் விரோதியான சாத்தான் பொய்யன் வன்முறைகளை புரிபவன் என்றாகும். யோவான் 8:44**இல் அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்தில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை. **அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் நகைச்சுவைக்கென நினைத்து கூட உங்கள் உதடுகளால் பொய் சொல்லாமலிருக்க வேண்டும். ஏனென்றால் **இரவு, பகலாக எங்களுக்கு விரோதமாக குற்றச்சாட்டுகளைச் சொல்ல வழி பார்த்துக் கொண்டிருக்கும் சாத்தான். எங்கள் செய்கைகளில் மாத்திரமல்ல நாங்கள் பேசுகின்ற வசனங்களைக் குறித்தும் சாத்தான் அவதானத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறான்.** என்பதைப் புரிந்துக் கொள்ளுங்கள். பொய் பேசுபவர்களை அழிக்கின்ற தேவனென்றும், இரத்தப் பிரியனையும், சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கின்றார் என மேலே கூறப்பட்டுள்ள வேத வசனம் கூறுகிறது. ஆகையால் உங்கள் வாயினின்று பொய்யான வார்த்தைகள் புறப்படாதென மன உறுதிக் கொண்டு **தேவனுக்கு பிரியமான பிள்ளையாக மாறுங்கள். வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் சத்திய தேவன் என்பதால், நான் உண்மை மாத்திரம் பேசவும் நகைச்சுவை என்றாவது பொய் கூறாதபடி இன்று முதல் செயல்படுகிறேன். நீங்கள் என்னை ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்."
(நீதிமொழிகள் 12:22)

ஜீவ மன்னா
மார்ச் **30**
திங்கள்

## தேவனே உங்கள் மேய்ப்பராயிருக்கிறார் !

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம்
அதி: 13 – 14

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்."
(சங்கீதம் 23:1)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் மகத்துவமான நாமத்தினால் இன்றைய தினம் வெற்றிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை போசித்தது போல நீங்களும் தேவனின் சொந்த பிள்ளையாக உலகில் தெரிந்தெடுத்து, வேறுபிரித்துக் கொண்டுள்ளமையால் உங்களையும் தினந்தோறும் போசிப்பாராக, ஆகையால் இன்றைய நாளில் உங்களது அனைத்து தேவைகளைக் குறித்தும் தேவன் சந்தித்து **அவைகளை ஏற்ற காலத்தில் நிறைவேற்றித்தருவார். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! தேவன் சர்வ பராக்கிம மகிமையின் தேவனானவர். ஆகையால் **நீங்கள் பயப்படாதீர்கள்.** இன்றைய நாளில் **சங்கீதம் 23:1**இல் தாவீது ராஜா கூறுவதாவது, **'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன்'** என்றாகும். தேவன் எங்களுக்கு அனைத்தையும் சந்திப்பாராயின் நாம் ஒன்றும் செய்ய அவசியமில்லையே என சில வேளைகளில் நீங்கள் சிந்திக்கலாம். ஆனாலும் நீங்கள் அப்படியாக எண்ணி **'சோம்பேறி தன் கையைக் கலத்திலே வைத்து அதைத் தன் வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான்'** என **நீதிமொழிகள் 26:15**இல் வாசிக்கின்றோம். இன்னுமாக **நீதிமொழிகள் 24:33,34**இல் **'இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கை முடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலும் உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலும் வரும்'** என்று எழுதப்பட்டுள்ளது. ஆகையால் தேவன் தேவைகளைச் சந்திப்பாரென நீங்கள் சோம்பேறியாக வாழக் கூடாது.

தேவ பிள்ளைகளே! தேவன் எமது பரலோக மேய்ப்பராகையால் தேவன் எங்களை போசிக்கின்றார். **உபாகமம் 28:8**இல் **'கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உன்னை ஆசீர்வதிப்பார்'** என்று எழுதியிருக்கிறார். ஆகையால் உங்கள் வேலை, உங்கள் வியாபாரம், உங்கள் விவசாயக் காரியங்கள் நீங்கள் கை வைக்கும் அனைத்தையும் தேவன் ஆசீர்வதித்து உங்கள் வாழ்வில் காணப்படும் **'இல்லாமை'** என்பதையே அழித்து விடுவார்கள். ஆகையால் நீங்கள் **தேவனை நோக்கி விசுவாசத்தோடு ஜெபித்து அனைத்து காரியங்களிலும் ஈடுபடுங்கள் உங்கள் நல்ல மேய்ப்பன் உங்களோடிருக்கிறார். வெற்றிச் சிறந்த நன்நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் எனது நல்ல மேய்ப்பன் இஸ்ரவேல் ஜனங்களை போசிப்பது போல என்னையும் போசிப்பீர்களென அறிவேன். இவ்வருடம் முழுவதுமாக எது இல்லாமையை அழித்து என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது;..." (யாக்கோபு 1:17 )

ஜீவ மன்னா

மார்ச் 31 செவ்வாய்

## உங்கள் ஆத்துமாவைத் தேற்றும் தேவ வசனத்திற்கு செவி கொடுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம் அதி: 15 – 16

**"அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்."** (சங்கீதம் 23:3)

தேவனுக்குள் பிரியமான என் அன்பு தேவ பிள்ளைகளே! **எம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராய் எம்மை வழி நடத்துபவருமான ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் இப்புதிய நாளில் வாழ்த்துகின்றேன்.** இந்த மாதம் முழுவதுமாக கண்ணின் மணியாக கருத்தோடு காத்த தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக! தேவ ஆவியானவரோடு மனிதனது ஆவியானது சம்பந்தப்படுகின்றது. மனிதனுக்கு ஜீவிக்கின்றதற்கு பிராணனைக் கொடுக்கின்ற தேவன், அவனுக்குள் இருக்கின்ற **தேவன் கொடுத்த ஆவியைக் குறித்து ஆவலாக இருப்பதோடு எப்போதும் எமது ஆவியை நோக்கிய வண்ணமாக இருக்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! நேற்றைய நாளில் தேவன் எமக்குக் கொடுத்த தேவ செய்தி தேவன் எமது மேய்ப்பனாக **எங்கள் வாழ்வில் காணப்படுகின்ற வறுமையை நீக்கி எம்மை ஆசீர்வதிக்கின்றார்** என்றாகும். இன்றைய நாளில் தேவன் கூறுவது தேவன் எமது ஆத்துமாவை போசிப்பதாக. **தேவ பிள்ளைகளே! இவ்வுலகில் வாழ்கின்ற எல்லா மனிதருக்கும் ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு அவசியமாகும்.** சில வேளைகளில் ஒரு நாளைக்கு இரண்டு வேளை அல்லது ஒரு வேளை இடை நின்று விட்டால் ஐயோ நான் காலையில் சாப்பிடவில்லையே ஐயோ பகல் சாப்பிடவில்லையே என்று துக்கப்படுகின்ற வேளைகள், ஒரு வேளை சாப்பாடு நின்று போயின் சரீரமானது பெலவீனமடைந்து சோர்ந்து போவதைக் காணலாம். பல நாட்கள் அப்படி நடந்தால் மனிதனானவன் பெலவீனமடைந்து விடுவான். அப்படியாக மனிதனது சரீரம் வளரவும், அது பெலனடையவும் ஆகாரம் எடுக்க வேண்டுமென்பது அவசியமாவது போல **மனிதனது ஆவியானது வளரும்படியாகவும், பெலன் பெறவும், பிராணனைப் பெறவும் ஆவிக்குரிய போசனை அவசியமாகும்.**

தேவ பிள்ளைகளே! மனித ஆவியானது போசனை பெறுவது அதற்கு சொந்தமானவரிடம் மாத்திரமே. சிறு பிள்ளைகளுக்கு பெற்றோர் மூலமாக பலாத்காரமாக உணவு ஊட்டப்படுவதை அவதானித்திருப்பீர்கள். பிள்ளைகள் நன்றாக வளரும்படியாகவே அவ்வண்ணம் செய்கிறார்கள். எங்கள் தேவபிதாவும் எமது ஆத்துமாவைத் தேற்றி தேவ வசனத்தில் எங்களை போசிக்கின்றார். ஆகையால் நீங்கள் **தேவ வசனத்தை வாசித்தல் செவி கொடுத்தல் மிக அவசியமாகும். தேவ வசனத்தை மிகக் கருத்தாக கேட்கும் போது தேவன் உங்கள் ஆத்துமாவைத் தேற்றுகிறார்.** அப்போது **நீங்கள் எல்லா நெருக்கங்களுக்கும் முகங் கொடுத்து வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! என் சரீரத்திற்கு உணவு எப்படியோ என் ஆத்துமாவிற்கு உணவு அவசியமாகின்றது. ஆகாரமே தேவ வசனமென்பதை அறிந்தக் கொண்டேன். ஒவ்வாரு நாளும் உங்கள் வசனத்தினால் என்னைத் தேற்றுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்." (நீதிமொழிகள் 8:34)

# கையடக்கத் தொலைபேசியின் மூலம் சுகம், அற்புதம் பெற்றுக் கொள்ள முடியும்.

**கணனி நேரடி ஒளிப்பரப்புக்கு நீங்களும் பிரவேசிக்கலாம்.**

பிரியமான தேவ பிள்ளைகளே!

எங்களுடைய சுகமளிக்கும் ஆராதனை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9.30 மணியிலிருந்து நேரடி ஒளிபரப்பாகும். அவ்வேளையில் உங்களுடைய கையடக்க தொலைபேசியிலோ அல்லது கணனி நேரடி ஒளிப்பரப்பின் மூலமோ முழுமையான சுகமளிக்கும் ஆராதனையை நேரடியாக காண முடியும். இதைக் குறித்து கையடக்க தொலைபேசியில் எந்தவித பணமும் அறவிடபடமாட்டாது என்பதை கருத்திற் கொள்ளவும்.

அதற்கு மேலாக எங்களுடைய வெப் நேரடி ஒளிபரப்பின் மூலம் எல்லா நிகழ்ச்சிகளும் *USTREAM* தளத்திலே சேகரிக்கப்படுகின்றதென்பதையும் 2013 டிசம்பர் மாதத்திலிருந்து இன்றைய நாள் வரையிலான எல்லா ஆராதனைகளையும் உங்களால் காண முடியும் என்பதை அறியத்தருகிறோம்.



**எங்களுடைய கணனி நேரடி ஒளிபரப்புக்குள் பிரவேசிக்க இரண்டு முறைகள் உண்டு.**

1. **Google.com » Ustream.tv » jesusnf (search) » jesusnf (click)**
2. **Google.com » jesusnf.org » Live Telecast**

**கடந்த கால நிகழ்ச்சியினை கணனி நேரடி ஒளிபரப்பின் மூலம் காண வேண்டுமானால்**

**Google.com » jesusnf.org » Live Telecast**
**வலது பக்கத்தில் கடைசியில் இருக்கும் Ustream யை க்ளிக் செய்ய வேண்டும்.**



மேலதிக விபரம்: சகோதரன் திலிப் ராஜ் குமார் ☎ 077-8881823

எபல், என்ட்ரோயிட் கையடக்க தொலபேசியிலேயும் டெப் ஆகியவற்றிலும் காண்பதற்கு Ustream APP Download செய்து jesusnf என்பதை Search செய்யவும்.

Apple Android Ustream App



ஆனாலும் தேவ பிள்ளைகளே! எனக்கும் இப்படியான வீடொன்று இல்லையே என நினைத்து நீங்கள் கவலைப்படாதிருங்கள். உங்களுக்கு அழகான, விசாலமான சகல வசதிகளமைந்த வீடு இல்லாவிடினும் தேவன் உங்களுக்குக் கொடுத்த வீட்டில் மனதிருப்தியோடும், சந்தோஷத்தோடும் ஜீவியுங்கள். ஏனென்றால் போதுமென்கின்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று 1 தீமோத்தேயு 6:6 இல் எழுதப்பட்டுள்ளது. அப்பொழுது உங்களைக் குறித்து மகிழ்ச்சியடைகின்ற தேவன் உங்கள் வீடு சிறியதாயினும், அழகாக இல்லாவிடினும் உங்கள் வாழ்க்கையை அளவற்ற ஆனந்தத்தால் நிறைத்திடுவார்.

ஜீவ மன்னா வாசகர்கள் உங்கள் அனைவருக்கும் இவ்வண்ணமான ஆசீர்வாதங்கள் உதயமாகட்டும், என்று ஜீவிக்கின்ற இரட்சகரான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் பிரார்த்திக்கின்றேன்!



**ஆவிக்குரிய செய்தி:**
**போதகர் ஏ.ஜே.ஜோசப்**

# இதோ!

24 மணித்தியாலங்கள்
நாள் முழுவதுமாக
உங்களுக்காகவே திறந்திருக்கும்
புத்தம் புதிய SMS சேவைகள்!



071-5382867

→ துரித சேவையில் உங்கள் புகைப்படத்துடன் ஜெப விண்ணப்பங்களை அனுப்ப அரிய சந்தர்ப்பம் ←

பிரியமானவர்களே, நீங்கள் ஒவ்வொரு நாளும் முகங் கொடுக்க வேண்டிய உங்கள் பிரச்சினைகள், இக்கட்டான நிலமைகள், வியாதிகள், உபத்திரவங்கள் என்பனவற்றை உங்கள் புகைப்படத்துடன் எந்த வேளையிலும், எந்த நேரத்திலும் **SMS** செய்தியின் மூலம் இப்பொழுது உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு அறிவித்து மத்தியஸ்த ஜெபத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்.

**SMS எழுதி அனுப்பவும். 071-5382867**

தொலைத் தொடர்பில்லை!

உங்களுக்கு **Android** யிலும் **Apple & micro soft** கையடக்க தொலை பேசியின் மூலம் **Whats App, Viber, Line** என்பவற்றில் மாத்திரம் உங்கள் புகைப்படத்துடன் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எமக்கு அனுப்ப முடியும்.

இதன் மூலம் உங்களின் **Voice Messages** அனுப்ப முடியும்.

Whats App | Viber | Line

## ஜீவ மன்னா தின மஞ்சரி சம்பந்தமாக

- ஜீவ மன்னா தின மஞ்சரியை தபால் மூலம் பெற்றுக் கொள்ள!
- புதிய வாசகர்கள் மன்னா மஞ்சரியை பெற்றுக் கொள்ள அவர்களின் முகவரிகளை எங்களுக்குக் கிடைக்கச் செய்யவும்!

**SMS எழுதி அனுப்பவும். 071-0714011**

தொலைத் தொடர்பில்லை!

விண்ணப்பமும் பதிலும் **SMS** செய்தியில் மாத்திரமே!

ஜீவ மன்னா வாசக கட்டணங்கள், சந்தோஷ காணிக்கைகள், காசு கட்டளைகள் என்பனவற்றிற்கு!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி, கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்


R/N:- QD/66/NEWS/2015


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு – 14.

011-2334865  071-4922929

arulandu.joseph@gmail.com  www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.